Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மக்ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

**மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.**

தொகுதி 3. | 1912௵ ஜூன்௴ 15௳ பரிதாபி௵ ஆனி௴ 2௳ | பகுதி 2.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.,
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S.
பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.

## (*Contents.*)


பக்கம்.

1. மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும்—ப. நா. ௩௫
Masters and how to reach them—By P. Narayana Iyer.

2. மாஸம்—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர். ௩௯
Month—By R. S Narayanaswamy Iyer.

3. தசாவதாரங்களின் உண்மை—டி. எ. கோபாலசாமி நாயுடு. ௪௧
Underlying Truth of the Ten Avatars of Vishnu. By T. A. Gopalaswamy Naidu.

4. வேதாந்த சித்தாந்த சமரசநிலை—மு. வே ௪௫
Vedanta & Siddhanta—By M. Venkatasamy Nattar

5. சிலந்திப் பூச்சி—என். எஸ். ஜம்புநாதன். ௫௨
Spider—By N. S. Jambunathan B. A., L. T., F. M. S.

6. உபசாந்தம்—கோ. வடிவேலுசெட்டியார் ௫௮
Upasantham—By K. Vadivelu Chettiar.

7. பத்திரிகைவரவு—பத்திராதிபர். ௬௧
Review of Papers—Editor.

8. சமாசாரம்—பத்திராதிபர். ௬௩
News—Editor.

9. பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம்.
Patanjala Yoga Sutra.


---


## கல்யாணி, அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து.

(ஒரு அருமையான தமிழ் நாவல்.)

இது மகா-ள-ள-ஸ்ரீ R. S. நாராயணஸ்வாமி ஐயர் அவர்கள் எழுதிப் பிரவித்தம் செய்திருக்கிற ஒரு நல்ல தமிழ் நாவல். இதன் விலை அணா 10. வேண்டுவோர் மதுரை வித்யாதர்மபரிபாலநசபையின் ஸெக்ரிடரி மகா-ள-ள-ஸ்ரீ R. ரங்கஸ்வாமி ஐயரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர், வக்கீல்,
ஸெக்ரிடரி, வித்யாதர்மபரிபாலந சபை,
புதுத்தெரு, மதுரை.

ஓம்

# பூர்ணசந்திரோதயம்.


| தொகுதி 3. | 1912ளூ ஜூன்மீ 15உ<br>பரிதாபிளூ ஆனிமீ 2உ | பகுதி 2. |
|---|---|---|


## மஹாத்மாக்களும், அவர்களையடையும் மார்க்கமும்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

5. அதனால், மஹாபுருஷர்களை முற்காலத்தில் எப்படி தரிசித்து அடைதல் கூடுமோ, அப்படியே இக்காலத்திலும் மஹாத்மாக்களைத் தரிசிக்கலாம், அடையலாம் என்று பிரஹ்மஞானிகள் (Theosophists) சொல்லுகின்றார்கள். முற்காலத்தைப் போலவே இக்காலத்திலும், நம்பூர்வீகர்கள் அநுசரித்து நடைபெற்ற மார்க்கமே இன்னும் நம்மால் அநுஷ்டிக்கத்தக்கது. அவர்கள் ஆசரித்துவந்த முறைகளை நாமும் நடத்தினோமானால் அவர்களடைந்த உயர்நலம் அமைந்த புருஷார்த்தமான லக்ஷியத்தை நாமும் அடைவோம். எல்லாமதங்களும் இப்படியே கூறுகின்றன. எல்லாமதங்களும் அப்பிராசீநமார்க்கத்தை ஒரேமாதிரியாக இன்னும் கூறுகின்றன. சநாதந தர்மமாகிய ஹிந்து மதமென்ன, பிற்பட்ட பௌத்தமதமென்ன, நவீநமான கிறிஸ்து மதமென்ன, இன்னும் அதிக நவீநமான இஸ்லாம் மதமென்ன, இவையெல்லாம் இம்மார்க்கம் உண்டு என்பதைப்பற்றி ஒரேவாக்காய்க் கூறுகின்றன. இந்த மார்க்கத்தின் முடிவையும் இம்மார்க்கம் நடைபெறும் விதத்தையும், ஒரேமாதிரியாக உபதேசிக்கின்றன. இக்காலத்தார், முற்காலத்தாரின் அநுபவத்திலிருந்த இம்மார்க்கத்தைப்பற்றி அவநம்பிக்கை கொள்ளுவார்க

ளேயாகில் முற்காலத்தவர்களால் நடத்தப்பட்ட முறையை இக்காலத்தவர்கள் நடத்த அசக்தர்களாயிருக்கின்றார்களென்றே ஏற்படும். இக்காலத்தவர்கள் அவ்விதம் கீழ்க்கடையர்களாக ஆகிவிட்டார்களென்று நாம் மதிக்கற் பாலதோ?

6· "மஹாத்மா" என்பவர் யாவர்? மனிதனிடம் குப்தமாயுள்ள ஈசுவராம்சம் மலர்ந்து பிரகாசம்பெற்றவராம். மற்ற மனிதரைப்போல் அவரும் உலகவாழ்வில் ஈடுபட்டுப் பின்பு செங்குத்தான சன்மார்க்கமென்ற மலைமீதேறிப் பூர்ணம்பெற்றவர். பரிசுத்த சரீரத்துடன் இன்னும் மேலே ஏறும்படியான திறமைபெற்றவர். நாம் இப்போதிருக்கின்ற படியில் அவர் முன்னொருகால் இருந்தவர். அவர் இருக்கின்ற நிலையில் நாம் ஒருகால் ஏறக்கூடியவராவோம். அவர் நிற்கும் பதவி நம்முடைய சக்தியை மீறியதன்று. அஃது ஒவ்வொரு மனிதனுக்கும் சாத்தியமானதேயாம். சாதாரண மனிதனுக்கும் மஹாவித்வானென்று சொல்லப்படுபவருக்கும் உள்ள வித்தியாசமெதுவோ அதுபோலவே மஹாத்மாக்களுக்கும் நமக்குமுள்ள தாரதம்மியம் என்று அறிக. ஞானபூமியில் அவர்கள் உயர்நலம் பெற்றவர்கள். ஒவ்வொரு மனிதனின் ஹிருதயத்திலும் ஈசுவர தேஜஸ் அமைந்துள்ளது. உபாதிகளின் பேதத்தால் அந்த ஈசுவரதேஜஸ்ஸானது மங்கலாகவும் திரைமூட்டம் பெற்றதாகவும் தோன்றும். நம்மெல்லோரிடத்தும் அந்தத் தேஜஸ்ஸானது ஒரேமாதிரியாக உள்ளது. ஆனால் அது உறைவிடமாகக் கொண்ட கவசங்கள் சிலரிடம் பரிசுத்தமாயிருக்கின்றமையால் அது நன்றாய்ப் பிரகாசிக்கின்றது! சிலரிடம் அக்கோசங்கள் அழுக்குள்ளவைகளாக விருக்கின்றமையால் அது மங்கலாயிருக்கிறது. அதன் ரஸ்மிகளை வெளியில் வராமல் அக்கோசங்கள் தடுக்கின்றன.

7. "மஹாத்மா" என்பவர் ஜ்யேஷ்டப்ராதா போன்றவர். மற்றமனிதரைப்போல் அவரும் மனிதரே. ஆனாலும் உலக விகாச முறையில் அவருடைய உயர்நலம் அதிகமாக மலர்ந்திருக்கின்றமையால் அவர் ஜ்யேஷ்டராவார். நான் இனிச் சொல்லப்புகும் சன்மார்க்கத்தில் அவர் வெகுதூரம் நடைபெற்றவர். அநேக தீக்ஷைகள் பெற்றதினால் அவருடைய பிரக்ஞையானது அகன்றுளது. அதன்

வரம்பில் இந்தப் பூலோகம் மாத்திரமல்லாமல் ஆத்மா இயங்கும் எல்லா லோகங்களும் அடங்கியுள்ளன. இத்தன்மையான அகன்ற அறிவு அவர்பெற்றிருந்தாலும் நம்மைப்போல் சரீரமுடையவராவர். நாம் உய்யுமாறும், நம்மை நல்வழிப்படுத்துமாறும், சன்மார்க்கத்தில் நாம் ஈடைபெறுவதற்கு உபதேசம் செய்யுமாறும், நம்மவருள் தகுந்தவர்களைச் சிஷர்களாக அமைத்துக்கொள்ளுமாறும் அவர் உலக சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பார். இத்தகைமையுடையவரே மஹாத்மா ஆவர்.

8. இவரையடையும் மார்க்கம் எதுவோ அதைச் சொல்லுவேன். எல்லாமதங்களும் இந்த ஒரே மார்க்கத்தைச் சொல்லுகிறதென்று முன் பிரஸ்தாபித்தேன். கிழ்நாடுகளில் அதன் பிரஸ்தாபம் இருக்கிறதென்று நான் சொன்னேன். மேல்நாட்டிலும் கிறிஸ்துமதத்தின் ரோமன் காதலிக் சம்பிரதாயத்தில் தொன்று தொட்டு இதேமார்க்கத்தைப் பற்றிய பிரஸ்தாபம் வியக்தமாய் இருந்துள்ளது. கிழ்நாட்டில் சன்மார்க்க முறையின் விவரணங்களுக்கும் மேற்கூறிய ரோமன்காதலிக் சம்பிரதாயத்திலுள்ள சன்மார்க்க முறையின் விவரணங்களுக்கும் வார்த்தை வித்தியாசமேயன்றி, கருத்தில் வித்தியாசமில்லை. ஆனால் கிறிஸ்துமதத்தின் பிராடஸ்டண்டு முதலான சம்பிரதாயங்களில் இந்தச் சன்மார்க்கமுறையைப் பற்றிய விஷயங்கள் முற்றும் மங்கி மறைந்து போயின. மஹம்மதிய மதத்தில் "ஸூபி" வகுப்பினர்களுள் சன்மார்க்க முறையைப் பற்றிய அநுஷ்டானங்களும் ஒழுக்கமும் பிராசீனமதங்களான ஹிந்து பௌத்தமதங்களிற் போலவிருக்கின்றன.

9. இச்சன்மார்க்கத்தில் முதலில் அதன் லக்ஷியம் அல்லது எல்லையாவது என்னவெனில், முழு அறிவுடனே ஈசுவரனுடன் கலத்தலேயாம். ஈசுவரனை ஸ்துதிபண்ணுதல் அல்லது ஈசுவரனுடன் கலக்கவேண்டுமென்ற அவாவுறுதல் மட்டும் போதாது. ஞானியானவன் ஓரோர் சமயத்தில் மெய்ம்மறந்து இருக்கின்ற நிலைமை மாத்திரம் போதாது. ஆனால் படிப்படியாய்த் தன் பிரக்ஞையானது மென்மேலும் அகன்று விசாலித்து ஸர்வபாவாபத்தி என்ற அகண்டாகார விர்த்தியாகிய உயர்ந்தபாவம் வரும்வரை தன் பிரக்

ஞானமானது மேன்மேலும் விரிந்து வரவேண்டியது. அதனால் பக்திமாத்திரம் போதாதென்றும், நன்னம்பிக்கை மாத்திரம், போதாதென்றும், ஞானம் முக்கியமென்றும் தெளிவுபடும். அதுவே லக்ஷியம். சந்மார்க்க முறையிற் பிரவேசிக்க முயல்பவவின் லக்ஷணம் என்னவென்றால், பிறர்க்குக் கைங்கர்யம் செய்வதில் தீவிரமான அவாவுள்ளவனாக விருப்பான். சுய நலம் பாராட்டான். தன்னுடைய எல்லா உடைமையையும் தியாகம் செய்வதில் சித்தனாயிருப்பான், தான் உண்மையில் எது நலமென்று நினைக்கிறானோ அதற்கு எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்ய அஞ்சான். இதுவே சந்மார்க்க முறையில் பிரவேசிக்கிறவனின் அறிகுறியாம். தான் கைக்கொண்ட தொழில் எதுவாயிருந்தாலும் சரி, அதில் தான் பூரணமாய் உழைக்கும்படியாகத் தூண்டும் மனத்தின் நிலையே முக்கியம். ஒருவன் தான் எதை சத்தியமென்று நினைக்கின்றானோ அவ்விஷயமாகத் தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்வதில் சந்தோஷ மடைவானாகில் அவனே கத்திமுனைபோன்று கூர்மையாயுள்ள சந்மார்க்கத்தில் பிரவேசிக்க பாத்தியஸ்தனாவான். சுருங்கச் சொல்லுமிடத்தில் தியாகம், தபஸ், முதலியவைகளில் பயிலுகிறவன் மாத்திரம் சந்மார்க்க முறையில் பிரவேசிக்க யோக்கியனென்று சொல்ல இயலாது. அம்முறையில் அவைகள் சாதநங்கள் தான். ஆயினும் அவைகள் குறைவுபடினும், தன்னை வெறுத்துத் தன் நலம் பாராட்டாமல் பிறர் நலம் பயக்கும் கைங்கர்யங்களை முடிப்பதில் தன் உடைமைகளையெல்லாம் கொஞ்சமும் கூசாமல் பூர்ணமாய்த் தியாகம் செய்யும் இயல்புடையவனே இதில் பிரவேசிக்க அருகனாவான். மநத்தின்கண் மாசில்லானையும் அன்பார்ந்த ஹிருதயத்தையுடையவனையும் சிஷ்யர்களாக அமைத்துக்கொள்ள அந்தந்தக் காலங்களிலுள்ள மனிதவர்க்கத்தில் மஹாத்மாக்கள் தேடுவார்கள். எந்தக்கஷ்டம் வந்தாலும் அதைப் பாராட்டாமல் பிறர் துன்பத்தைத் துடைப்பதில் அன்பார்ந்த ஹிருதயமே, நடுராத்திரியில் மஹாத்மாக்களின் கண்ணுக்குத் தோன்றும், அவனையே நாடுவர். அவனே உற்ற சிஷ்யனுமாவான். இதுதான் சந்மார்க்க முறையில் முதற்படி. (இன்னும் வரும்.)

ப. நா.

## மாஸம்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி.)

அதிகமாஸம் (Intercalary month) அநேகமாய்ச் சித்திரை முதலான ஸௌரமாஸங்களில், ஒவ்வொரு மாதத்திலும், ஒரே அமாவாஸ்யையும், ஒரே சாந்த்ரமாஸ ஆரம்பமுந்தான் ஏற்படுவது வழக்கம். ஆனால், ஒவ்வொரு ஸௌரமாஸமும், சுமார் 30 அல்லது 31 தினங்களிருப்பதாலும், ஒவ்வொரு சாந்த்ரமாஸமும் 29½ நாட்கள் மாத்திரம் கூடியதாதலாலும் துவக்கத்தில் ஒன்றும் கடைசியில் ஒன்றும் ஆக இரண்டு அமாவாஸ்யைகளும் அவைகளையடுத்து முறையே இரண்டு சாந்த்ரமாஸாரம்பங்களும் சிற்சிலமாஸங்களில் ஏற்படுவது வழக்கம். உதாஹரணம்:—சித்திரைமாஸம் 2-ம் தேதியொன்றும், 31-ம் தேதியொன்றுமாக இரண்டு சாந்த்ரமாஸங்கள் ஆரம்பித்தால், அவைகளில் முதலில் வரும் மாஸம் அதிகவைசாகம் எனவும் இரண்டாவது வரும் மாஸம் நிஜவைசாகம் எனவும் சொல்லப்படும்.

க்ஷயமாஸம்:—கார்த்திகை, மார்கழி, தை ஆகிய 3 ஸௌரமாஸங்களும் ஒவ்வொன்றும் 29½ நாட்களுக்குட்பட்டதாயிருக்கின்றன. ஒவ்வொரு சாந்த்ரமாஸமும் சுமார் 29½ நாட்களுக்குக் கொஞ்சமதிகமாயுமிருப்பதால் சில சமயங்களில், ஏதாவது ஒரு ஸௌரமாஸத்தில் அமாவாஸ்யையே இல்லாமலும், சாந்த்ரமாஸாதியில்லாமலும் ஏற்பட்டுவருவதுண்டு. அப்பொழுது ஒரு சாந்த்ரமாஸம் குறையும். அவ்வாறு குறையும் மாஸத்துக்கு க்ஷயமாஸம் என்று பெயர். மார்க்கசீர்ஷம், பௌஷம், மாகம் இவைகளில் ஒன்று தான் க்ஷயமாஸமாக அமையும். க்ஷயமாஸத்துக்கு முன்னும் பின்னும் ஒவ்வொரு அதிகமாஸம் நேரிடுவதுண்டு.

க்ஷயமாஸங்கள் ஒரு நூற்றாண்டில், ஒன்று அல்லது இரண்டு தான் ஏற்படுகின்றன. சென்ற 19-ம் நூற்றாண்டில் 1822-ம் வருஷத்தில் ஒரு க்ஷயமாஸம் ஏற்பட்டதாகவும், இனி இந்த 20-ம் நூற்றாண்டில் 1963-ம் வருஷம் ஒன்றும் 1982-ம் வருஷம் ஒன்றும் ஏற்படும் என்று கணிக்கப்பட்டிருக்கின்றது. (Vide Mr. Swamikannu Pillai's Indian Chronology, page 101.)

நமது தேசத்தில் ஆதிகாலம் முதல், சாந்த்ரமாஸமே முக்ய மாய் அநுஷ்டித்து வந்திருப்பதாய், வேதங்கள், இதிஹாஸங்கள், புராணங்கள், ஸூத்ரங்கள் முதலான பல பூர்வநூல்களில் சொல் லப்பட்டிருக்கின்றது. தற்காலத்தில் வழங்கும் ஸௌரமாஸமா னது விசேஷமாய் ஆர்யபட்டர் காலத்துக்குப் பிறகு தான் ஏற்பட் டதாய் ஊகிக்கப்படுகின்றது. வங்காளத்திலும், இப்பொழுது நமது தமிழ்நாட்டிலும், மலையாளத்திலும் வழங்குவது ஸௌரசாந்த்ரமா ஸம் எனப்படும். அதாவது லௌகிகவ்யவஹாரங்களுக்கு ஸௌர மாஸக்கணக்கும், வைதிககார்யங்களுக்கு திதி, நக்ஷத்ரம் முதலான சாந்த்ரமாஸகணக்கும் அநுஷ்டிக்கப்படுகின்றன. ஆனால் ஆந்த்ர தேசம், மஹாராஷ்ட்ரம் முதலான உத்தரதேசங்களில், லௌகிக வைதிக இருமுறைகளுக்கும் சாந்த்ரமாஸமே அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இது தவிர மகம்மதியர்களால் அநுஷ்டிக்கப்படும் 'ஹிஜிரா' என்ற வருஷமானது, சாந்த்ரமாஸமாகவே இருக்கின்றது. ஒவ் வொருவருஷமும், 354 நாட்கள் கொண்டது. மாதங்கள் முறையே 29, 30 நாட்கள் கொண்டதாய்க் கணக்கிடப்படுகின்றன.

சாந்த்ரமாஸமானது அமாந்தம், அதாவது சுக்லபக்ஷப்ரதமை முதல் அமாவாஸ்யை ஈறாகவுள்ளது என்றும், பூர்ணிமாந்தம், அதாவது கிருஷ்ணபக்ஷப்ரதமை முதல் பௌர்ணமி ஈறாகவுள்ளது என்றும் இரண்டு வகைப்படும். இவ்விருமுறைகளும் உத்தரதேசங் களில் சிற்சிலவிடங்களில் அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றன.

**R. S.** நாராயணஸ்வாமி ஐயர்.

---

# தசாவதாரங்களின் உண்மை.

(16-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

11. பரசுராமருடைய அவதாரத்தின் கருத்து க்ஷத்திரியர்களின் தவறான இந்த நினைப்பைத் தொலைக்கவேண்டுமென்பதேயாம். அதுதான் மேற்கண்ட வார்த்தைகளுக்கு அர்த்தம். பரசுராமரோ தர்மக்ஞர். ஒருவரை நல்வழிப்படுத்த வேண்டுமானால் தண்டமென்ற முறையானது கடைசியில் உபயோகிக்கவேண்டியது. நான்குவித உபாயங்களில் முதல் மூன்றும் தவறிப்போனால் தண்டம் என்ற உபாயத்தை ஸ்மிருதிகளும் கூறுகின்றன. அம்முறைப்படியே பரசுராமரும் நடந்தாரென்று தோன்றுகிறது. முதலில் ஸாம உபாயத்தைக் கைப்பற்றி க்ஷத்திரிய தர்மத்தை உபதேசம் செய்தார். இக்கற்பனையானது ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண லோகங்களில் நிகழ்ந்தது. அதாவது ஸ்தூல சரீரத்திலும், காமமாநஸிக சரீரத்திலும், விக்ஞாந சரீரத்திலும் தான் செய்த உபதேசம் படியும்படியாகச் செய்வித்தார். அப்படி ஒவ்வொன்றிலும் எழு தடவை செய்வித்தார், ஏழு என்பது சிரேயஸ்கரமான எண். ஜயத்தை உண்டுபண்ணக்கூடியது. இப்படி அர்த்தம் பண்ணுவதில் அநேக ஆக்ஷேபங்கள் இருக்கின்றன என்பதை நான் அறிவேன். கதையில் வரும் மற்ற விஷயங்களையும் இவ்வர்த்தத்திற்கு முரணாமல் பொருள் கொள்ளலாமென்று எனக்குத் தோற்றுகிறது.

12. பரசுராம அவதாரத்தின் கருத்துப் பூர்த்தியாய் நிறைவேறவில்லையென்று புராணங்களால் தெரிகிறது. அதனால் பரசுராமர் கருத்தை நிறைவேற்றும் வண்ணம் ஸ்ரீ ராமாவதாரம் ஏற்பட்டது. யதார்த்தமான க்ஷத்திரியன் இருக்கவேண்டிய முறையைத் தம்முடைய அநுஷ்டாந ரூபமாய் உபதேசித்தார். அதுவும் பலிக்கவில்லை. முன்போல் க்ஷத்திரியர்கள் தீயராகவே நடந்து வந்தார்கள். பின்பு கிருஷ்ணவதாரம் ஏற்பட்டது. குருக்ஷேத்திர யுத்தத்தில் க்ஷத்திரியர்கள் நாசமாகும்படி செய்வித்தார். அதன் மூலமாய் நீதிமுறையிலும் ஞாநமுறையிலும் அபிவிருத்தியாதலுக்குத் தடைகளாக இருந்த இவர்களைத் தொலைத்தார்.

"ஜனங்களுக்குள் நாசத்தை உண்டாக்குகிற குரூரனான காலனாக விருக்கின்றேன். ஜனங்களை ஸம்ஹாரம் செய்வதற்காக இப்போது பிரவிர்த்தித்திருக்கிறேன். அந்தந்த சேனைகளில் யுத்தஞ் செய்கிறவர்கள் உன்னைத் தவிர சகலரும் மாண்டுபோவார்கள். ஆகையினாலே நீ யுத்தத்திற்கு எழுந்திரு. சத்துருக்களை ஜயித்து நீ கீர்த்தியைப்பெறு. சகல போகங்களும் பொருந்தியிருக்கிற ராஜ்யத்தை நீ அநுபவி. என்னாலேயே இவர்களெல்லாம் முன்னமேயே கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அர்ஜுனா! வெளிப்பார்வையில் நிமித்த மாத்திரமாகவிரு" என்ற பகவானுடைய வாக்கானது இங்கு கவனிக்கத்தக்கது.

13. ஆகவே, மனிதனிடம் மநத்தத்வம் வியக்தப்பட ஆரம்பித்தது முதல் ரஜோகுணமானது மேன்மேலும் அபிவிருத்தியாகி வரம்பு கடந்து போகவே அதைத் தடுக்கும் பொருட்டு மேற்கண்ட மூன்று அவதாரங்களும் ஏற்பட்டன.

14. முன் பிரஸ்தாபித்தபடி தாம் எடுத்துக்கொண்ட கர்மத்தைப் பரசுராமர் கொஞ்சம் முடித்தார். மனிதவர்க்க விகாசமுறை ஒருபடி ஏறினது. பின்பு ஸ்ரீ ராமசந்திர அவதாரம் ஏற்பட்டது. க்ஷத்திரியர்கள் சம்பந்தமாய் அவர் செய்த தர்மம் முன்னரே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய சரித்திரத்தின் மற்ற விஷயங்களாவன: சீதையைமணம்புரிந்ததும், வநவாசம் செய்ததும், சீதையை இழந்ததும், பின்பு சீதையை அடைந்ததுமாம். ராமசந்திர அவதாரமானது, மனிதவர்க்கம் சாத்விக நிலையைப்பெற்றதைக் குறிக்கின்றது. அதாவது போதுமான வரையில் விக்ஞாநப் பயிற்சியும் ஸுசீலமும் பெற்று மனிதன் தன் விகாசமுறையைத் தானே பிரக்ஞையுடன் நேரில் நடத்தத் தீர்மானங்கொண்டு ஞாநத்தையும் பலத்தையும் மேன்மேலே அதிகமாகப் பெறும்படி யத்நம் செய்தலாம். இதின் முதற்படி புத்திபெறுதல். இது சீதையுடன் மணம்புரிந்ததாக உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது. புத்தி மலரவே உயர்நலமமைந்த மேலான பதவிக்கு அநுகூலமான தியாக நிலையைப்பெறுதலுக்கு உலகத்தைவிட்டு வெளியேறுதல் அடுத்த படியாம். இதுவே வநவாசம். இக்காலத்தில் மநக்கொந்தளிப்

பும், காமனைகளின் துடிப்பும் அதிகமாக ஏற்படுகின்றன. இப்போது பெரிய சத்துரு ராவணன், பெரிய அழுகைக்குரலுடையன். காமமானது பத்துவாய்களின் மூலமாய் விஷயதர்ச்சி பெறுவதற்குத் தீவ்ரமான அவாவை ஏற்படுத்திக்கொள்ளுகின்றது. பத்துவாய்கள் என்பது பத்து (ஞானகர்ம) இந்திரியங்கள். மனிதன் ஒருபடி தவறுகின்றான். சீதையை ராவணன் கொண்டுபோகின்றான். புத்தியானது காமத்தினால் மூடப்பெற்று இருளடைகிறது.* சாதக நிலையிலுள்ள ஜீவனுக்கு அது இனிப்பிரயோஜனமின்றாம். அதனால் ராவணனையும் அவனது வர்க்கத்தினரையும் த்வம்ஸம் பண்ணி, புத்தியாகிய சீதையைத் திரும்பப் பெறவேண்டும். சீதையை ஸ்வீகரிக்கும் முன் அக்கினிபரீக்ஷையால் அவள் புநீதம் பெறவேண்டும். ஸ்ரீ ராமருடையவும், சீதையினுடையவும் கதையை இன்னும் அதிகமாக விரித்து இன்னும் சில விஷயங்களைச் சொல்லுவார்கள். நான் எடுத்த விஷயத்தைத் தெளிவுபடுத்துவதற்கு இம்மட்டே போதுமானது. ராமாயணத்தில் உள்ளடங்கியுள்ள பிரதீகங்களும் உருவகங்களும் மிகவும் உத்ஸாகப்படுத்தக்கூடியவை. அறிவு பயக்கக்கூடியவை. அவைகளைப்பற்றி வேறோர் சமயம் தெரிவிப்போம்.

15 எட்டாவதான கிருஷ்ணாவதாரத்தைப் பற்றி இப்போது பேசுவோம். கிருஷ்ணாவதாரம் ஆத்மாவின் பிரதீகம். கிருஷ்ணம் என்றால் கறுப்பு, இருள்; அறியப்படாதவன்; அதாவது ஆத்மாவானது மனிதவர்க்கத்திற் பூர்ணமாக விகாஸம் பெற்று மலரவில்லை. கிருஷ்ணன் வசுதேவருடைய புத்திரன்; வசுதேவர் என்றால் எங்கும் பரவிய ஒன்று, பிரத்யகாத்மா; தேவகி என்றால் மூலப்பிரகிருதி. மதுபுரியில் பிறந்தார். பிரஹ்மலோகத்திலுள்ள மதுபுரியிற் பிறந்தார். மது=அம்ருதம்=பிரஹ்மா. அவருடைய பால்யத்தைக் கோகுலத்திற் கழிக்கின்றார். கோகுலம்: கோ=இந்

---

* அடியிற்கண்ட பாடல் இங்கு கவனிக்கத்தக்கது.

பொருளுங் காமமு மென்றிவை போக்கிவே
றிருளுண் டாமென வெண்ணலர் ஈதலும்
அருளுங் காதலிற் றீர்தலு மல்லதோர்
தெருளுண் டாமென வெண்ணலர் சீரியோர். —கம்பர்.

திரியம்; குலம் = ஜநங்கள் கூடுமிடம். துவாரகையில் ராஜ்யபாரம் பண்ணுகின்றார்; துவாரகா =வழியில். அதாவது பிரஹ்மரந்திரத்தில். கிருஷ்ணவதாரத்தின் தத்துவம் மிகவிசேஷமானது. மநத்தைக் கவரக்கூடியவளவு உத்ஸாகத்தைக் கொடுக்கக்கூடியது. அதைப்பற்றி வேறோர் சமயம் கூறுவோம்.

16. இனி ஒன்பதாவது அவதாரமாகிய பௌத்தாவதாரத்தைப்பற்றிப் பேசுவோம். யோகியினுடைய நிர்விகல்பஸமாதியின் நிலையைக் குறிக்கிறது. மலராத ஆத்மதத்துவம் இப்போது மலர்ந்து கீழான தத்துவங்களுடன் சம்பந்தித்து அவைகளைத் தூய்மைப்படுத்தி நலம்பெறச் செய்து உயர்த்துகின்றது என்பதை இந்த அவதாரம் குறிப்பிடுகின்றது.

17. இனி வரப்போகும் கல்கி அவதாரத்தில் மனிதவர்க்கத்தினர் எல்லாரும்பிராஹ்மண யோக்யதை பூர்ணமாய்அடைவார்கள் (பிராஹ்மணன் என்றால் பிரஹ்மத்தை அறிகிறவன்); அவனிடம் ஆத்மா பூர்ணம்பெற்றுமலர்கிறான். கல்கியவதாரகாலத்தில்எல்லாரும் பூர்ணம்பெற்று ஆத்ம மலர்ச்சியைப் பூர்த்தியடைந்தவ ராவார்கள். இனி வெகுகாலத்திற்குப் பிறகு வரப்போகின்ற அந்தக்காலத்தில், இப்போதுபோல இங்கு ஒரு பூர்ணம்பெற்றவர், அங்கு ஒரு பூர்ணம் பெற்றவரென்றிராமல் எல்லா ஜநங்களும்பூர்ணம்பெற்று ஞாநிகளாய் ஈசுவராம்சம் நிறைந்தவர்களாய் அமைவார்கள்.*

ஓம் தத் ஸத்.

**T. A.** கோபாலசாமி நாயுடு.

* 'N. B.-Adapted from (Theosophy in India'.

## வேதாந்த சித்தாந்த சமரச நிலை.

(24-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

7. கைவல்யநவநீதம் என்னுந் தமிழ்நூலில்,

"தன்னையுந் தனக்காதாரத் தலைவனையுங் கண்டானேல்
பின்னையத் தலைவன்றானாப் பிரமமாய்ப் பிறப்புத்தீர்வன்
உன்னைநீ யறிவாயாகி லுனக்கொரு கேடுமில்லை
என்னைநீ கேட்கையாலே யீதுப தேசித்தேனே"

என்று கூறப்பட்டிருக்கிறது. இதன் கருத்து:—சிவனாகிய தன்னையும், தனக்காதாரமாயுள்ள பதியையும் தரிசிப்பானேல் பின் அவன் பிரமமாய் விளங்குவன் என்பது. 'பிரமமாய்' என்றவிடத்திலேயே நூல்கள் மாறுபடுகின்றன. தலைவனையுணர்தற்குத் தன்னையுணர்தல் இன்றியமையாததாகலின் முற்கூறப்பட்டது. அதுபற்றியே "தன்னையுணர்ந்தவன் ஞானியாவன்" என இந்நூலினுள்ளும், "தன்னைத்தா னுரைத்திருந் தகையறு பிறவியென்ப, தென்னத்தான் மறையுமற்றைத் துறைகளு மிசைத்தவெல்லாம்" எனக் கம்பராமாயணத்துங் கூறப்பட்டிருக்கின்றன. 'தான்' என்னுஞ் சொல் சிலவிடங்களில் பதியையும் சிலவிடங்களில் பசுவையும் உணர்த்தாநிற்கும்.

8. ஆன்மா என்னுஞ் சொல் ஜீவ பரங்களுக்குப் பொதுப் பெயராயிருப்பினும், அது வேதத்தில் வந்துழி பிரமப்பொருளையே யுணர்த்துதலும் ஆகமத்தில் வந்துழி ஜீவப்பொருளையே யுணர்த்துதலும் ஆகிய மரபுவேறுபாட்டினைப் பெற்றிருக்கின்றது. வேதத்தில் ஆன்மசப்தம் சிவனையுணர்த்தமாட்டாதென்பது இருதிறத்தார்க்குமுடன்பாடே. வேதத்தில் 'ஆன்மா ஏகனே' என்று சொல்லியிருத்தலினால் இரண்டாவதொரு பொருளின்றென ஒரு சாரார் கொண்டனர். வேதத்தின் பாஷியம்போன்ற ஆகமங்களில் பசுபாசங்களினுண்மை கூறப்பட்டிருத்தலின் வேறு பொருளுண்டெனவே கொண்டு 'ஆன்மா ஏகன்' என்பதற்கு வேறு தாற்பரியங்கூறுவர் மற்றொருசாரார்.

"ஒன்றென்ற தொன்றே காணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளைகா—ணொன்றின்றா
லக்கரங்க ளின்றா மகரவுயி ரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு"

என்பது சிவஞானபோதம். இதன் கருத்து:—வேதத்தில் ஆன்மா ஒன்றெனக்கூறியதன்மையே. அதன் பொருள் ஒன்றென்பதே தவிர வேறில்லை. அதன்றாற்பரியம் பரமான்மா ஒன்றென்பதே. ஒன்றெனக்கூறுகிற் நீ பாசத்தோடுள்ள பசுவாகலின், பதியின் வேறாகுவை என்பதாம்.

9. வேதாகமங்களில் விதிக்கப்பட்ட "பிரமாகம்," "சிவோகம்" என்னும் பாவனைகள் பாசக்ஷயத்தின் பொருட்டு வேண்டப்படுமென்று சிவஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திரங்கூறுகின்றது. சித்தியாரில்:—

"கண்டவிவை யல்லேனா னென்றகன்று காணாக்
கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினொடு முளத்தவன்றா னின்றகலப் பாலே
ஸோஹமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலு மலங்களெலாங் கருடதியா னத்தால்
விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறை களுமதுநா னானே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே"

என்று ஸோஹம்பாவனாநிலை நன்கு விளக்கப்பட்டிருத்தல் காண்க. கருடதியானத்தைக் குறித்துச் சிவஞானபோத வுரையில் முனிவரர் பின் வருமாறெழுதியுள்ளார்:—"ஈண்டுக் கருடபாவனை யென்றதியாதெனிற் கூறுதும்: ஆதிபௌதிககருடன், ஆதிதைவிக கருடன், ஆத்தியான்மிககருடன் எனக்கருடன் மூன்றுவகைப்படும். இவ்வாறு பொருடோறுங் கண்டுகொள்க. அவற்றுளுலகத்திற் காணப்படுங்கருடன் ஆதிபௌதிககருடன். அதற்கதிதெய்வமாய் மாந்திரிகனுள்ளத்தி னதுபோல வைத்துத் தியானஞ்செய்து கணிக்கப்படும் மந்த்ரம் ஆதிதைவிககருடன். அம்மந்த்ரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடனெனப்படும். அவற்று ளீண்டுக்கருடனென்றது கருடனுக் கதிதெய்வமாய் மாந்திரிகனுளத்திற் காணப்படும் மந்த்ர

ரூபமாகிய ஆதிதைவிககருடனே. அதனைப் பாவித்தலாவது நாடோறும் பயின்றுவந்த பயிற்சி விசேடத்தால் அம்மந்த்ரரூபமே தானாக அநந்யபாவனை செய்து தன்னறிவு அதன்வசமாம்படியுரைத்து நிற்றல். அங்ஙனம் நின்றந்த மந்த்ரக்கண்கொண்டு பார்ப்பவே அஃதவ்விஷவேகத்தை யாற்றுத லொருதலையாகலின் அப்பாவனை யிண்டைக்குவமையாயிற்று. இதனானே கருடபாவனை சத்தியமா மென்பதூஉம், அதனை யசத்தியமென்பார் மதம், போலியென்பதூஉம் தெற்றெனவுணர்க. புள்ளு, விலங்கு, மரம் முதலிய சராசரங்களுக்கெல்லாம் அதிதெய்வ மந்த்ரமுளவென்பதூஉம், படிகம்போலதுவதுவாமியல்புடைய ஆன்மா அவற்றுளெவ்வெம்மந்த்ரங்களைக் கணிப்பினும் அவ்வம்மந்த்ர சொரூபியாவ னென்பதூஉம் சருவஞானோத்தர முதலியவற்றுட்காண்க." உயிர் எதனைப் பாவிக்கின்றதோ அதனையடையுமென்ற உண்மை "யாதொன்று பாவிக்க நானதுவாதலால்" என்ற தாயுமானவர் திருவாக்கானும் எளிதுபெறுவதாகும். இவ்விஷயம் பகவத்கீதை எட்டாமத்தியாயம் ஐந்து ஆறும் சுலோகங்களினுலுமறியப்படுகின்றது.

10. இனி, திருமந்திரம், ஒழிவிலொடுக்கம், தாயுமானவர் பாடல் முதலிய நூல்கள் சமரசஞானநூல்களாதலின் அவற்றை யாதாரமாகக்கொண்டாராய்ந்து சித்தாந்தப்படுத்துவோம். வேதாந்த சித்தாந்தங்களைக் குறித்து அடியில் வரும் பாடல்கள் திருமந்திரத்திற்காணப்படுகின்றன :—

"அனாதி சிவனைம் மலமற்றப் பாலாய்
அனாதி யடக்கித் தனைக்கண் டரனுய்த்
தனாதி மலங்கெடத் தத்துவா தீதம்
வினாவுநீர் பாலாதல் வேதாந்த வுண்மையே"

"நித்தம் பரனோ டுயிருற்று நீண்மனஞ்
சத்தமுத லைந்துந் தத்துவந்தா னீங்கிச்
சுத்த மசுத்தந் தொடராவகை நினைந்
தத்தன் பரன்பா லடைதல்சித் தாந்தமே"

இவற்றால் சிவன் அநாதியென்பதும், பாசம் ஐந்துண்டென்பதும், சிவன் தன்னைச் சிவனாய்ப் பாவிக்கவே, பாசமகலுமென்பதும், சிவத்

தையடைந்த மாத்திரத்தில் "தான்" என்பது கெட்டுச் சிவமாய் விளங்குமென்பதும் விளக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் வேதாந்த சித்தாந்தத்தின் சூக்ஷ்மபேதத்தை "தானான வேதாந்தம் தானென்னுஞ் சித்தாந்தம்" என்னும் ஒரே பாதத்தினால் யோகீச்வரர் விளக்கியுள்ளார். வேதாந்தநூலெனப்படுகின்ற யாவும் அவித்தியா சம்பந்த ஜீவனுக்கு ஓர் தொடக்கங் கூறுமையால் அவற்றின் கருத்தும் ஜீவனின் அநாதித்வத்தை மறுக்கவில்லையென்பது சித்திக்கிறது. இவ்வுண்மை "அதுதானெப்படி யென்றக்கா லநாதியாஞ் சிவமெல்லாம்" என்று கைவல்யநவநீதங் கூறுதலாலும் வலியுறுத்தப்படும்.

11. இனி, சுத்த சிவாநுபூதிமானாகிய சீகாழிக் கண்ணுடைய வள்ளலார் தாமருளிய ஒழிவிலொடுக்கத்தில் "பஞ்சமலமும் பசுவுந்தமும் பதியும்" கொண்ட சித்தாந்தியாரெனினும் அவர் வீண்வாதத்தை வெறுத்து மெய்ந்நிலையை விரும்பிச் சமரச உபதேசஞ் செய்தவர்.

> "அருளாலே தம்மை யறிந்தருளா யந்தப்
> பரிபூரணமே பரையாய்ப்—பரையொழிவில்
> ஆநந்தா தீதமா மத்துவித சித்தாந்த
> மோனம் வேதாந்த முடிபு"

என்பது அவருபதேசம். இதன் பொருள்:—முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து நின்றவிடத்துப் பாசம் ஈது அருள் ஈது என்று பகுத்தறிந்தவறிவு தாம் என்று தம்மை யருளாலறிந்து, பின்னர்த் தம்மையும் அவ்வருளையும் பிரித்துப் பாராது அவ்வருள் தாமாயிருந்து, பின்னர்த் தம்மைச் சிறிதுந்தோற்றாத அந்தப் பரிபூரணமாகிய பரையேயாகி, பின்னர் அப்பரை நீக்கத்தில் தோன்றும் ஆநந்தமயமாகி, அவ்வாநந்தத்தையும் இங்ஙனமென்று அறியாது அதனுளதீதப்படுவதாகும் அத்வைதமான ஆகமமுடிவாகிய மௌநம் வேதமுடிவிற்த முடிவாம் என்பது. மற்றும்,

> "அறிவுக்கறிவென்னு மாகமங்கள் சுத்த
> அறிவென்னும் வேதத்தினகதம—பிறியா
> நிலைக்குச் சரியாகும் நீ யென்றால் நானென்
> றலைக்கு மரிபிரம ரை"

என்று வேதாகமங்களின் தாற்பரியங்கூறினர். வேதங்கள் பிரமமானது சுத்த அறிவு என்று கூறும். ஆகமங்கள் சிவமானது பசுவாகிய அறிவுக்கு அறிவிக்குமறிவு என்று கூறும். வேதத்திற் கூறியவண்ணஞ் சீவதத்துவங் கெட்டடைகிற நிலையும் ஆகமத்திற் கூறியவண்ணம் தற்போதங் கெட்டடைகிற நிலையும் பிரமம் என்றும் சிவம் என்றுங்கூறப்படுகிற ஒரே நிலையாகலின் பரஞானக்கை வரப் பெற்றோர்க்கு இரண்டுஞ் சரியேயாகுமென்பதும், வெறும் அபரஞானமாத்திரமுடையார் நீ அது என்றும், அது நான் என்றும் கூறிக்கொண்டு மாறுபடுவரென்பதும் மேலதன் கருத்தாகக் காண்க.

12. பதியானது அகண்டாகார சுத்த சச்சிதானந்தப் பழம்பொருளாயுள்ளதென்பதும், ஜீவர்கள் ஜநநமரண துக்கத்தினின்றும் நீங்குதற்குபாயந் தேடவேண்டுமென்பதும், வேதாகமங்களில் விதிக்கப்பட்ட கிரியை யெல்லாம் ஞானத்திற்கேது வென்பதும், யானெனதென்னுஞ் செருக்கற்றாலன்றிப் பரஞானமுண்டாகாதென்பதும், பரஞானத்தாலன்றிப் பேரின்பவாழ்வு கூடாதென்பதும், இன்னோரன்ன பிறவுமிருதிறத்தார்க்கு முடன்பாடே. அங்ஙனமாகவும் பிரமம் என்றும் சிவம் என்றும், சீவன் என்றும் பசுவென்றும், அவித்தை யென்றும் ஆணவமென்றுங் கூறப்படுகிற பெயர் வேறுபாட்டானே மாறுபடுவர். "சத்தாதி தத்துவம் போய்த் தானு மெதிருங்கழன்றாற், சித்தாந்த வேதாந்தச்சீர்மையிலை" என்றமையால் இவை யெல்லாம் வெறும் வாசாஞானமன்றி மெய்யநுபவ நிலையில் நிற்பனவல்ல. ஒன்றையும் போதத்தாலெதிரிட்டுப் பாராமல் திருவருளை முன்னிட்டுச் செல்லவேண்டுமென்பதே ஒழிவிலொடுக்கத்தின் முக்கியவுபதேசம். அதனையே பலவிடத்தும் வற்புறுத்திக்கூறுவர். திருவருளை முன்னிடுங்கால் நான் செய்தேன் பிறர் செய்தார் என்னுமற்பவறிவொழிந்து உலக ஐக்கியமுமுண்டாமன்றோ? முத்திநிலையிற் சீவன் எவ்வாறாகின்றதென்றவொன்றைக்குறித்தே இருவரும் முரணுகின்றனர். காமவெகுளி மயக்கங்களாகிற குற்றங்களைக் கடிந்து திருவருளின் வழிச்செல்லவேண்டுமென்பது இருதிறத்தார்க்கு முடன்பாடாகவே அதனை விடுத்து முடிந்த நிலையைக்குறித்துத் தமது போதங்கொண்டு தடுமாறுதலாற் போந்தபயனென்னை?

திருவருளானன்றி உண்மைநிலை கூடாதென்பது, "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்று ஸ்ரீமாணிக்கவாசகஸ்வாமிகளும் "பொய்யைப்பொய் யென்றறியும் போதத்துக்காதரவுன், மெய்யருளையன்றோ விளம்பாய் பராபரமே", "தன்னையறிந்தருளே தாரகமா நிற்பதுவே, யுன்னையறிதற்குபாயம் பராபரமே" என்று தாயுமானஸ்வாமிகளும், "தாயுடன் சென்று பின்றாதையைக் கூடிப் பின்றாயைமறந், தேயுமதேநிட்டை யென்றானெழிற் கச்சியே கம்பனே" என்று பட்டினத்துஸ்வாமிகளுந் திருவாய்மலர்ந்தருளிய வாற்றா னினிது பெறப்படும்.

13. இதுகாறுங்கூறியவாற்றால், மனிதர்கள் ஜகத் ஜீவ பரங்களைப்பற்றிக் கொண்ட கொள்கை வேறுபாட்டால் உலகில் பலமதங்களேற்பட்டனவென்பதும், ஆன்றோரெல்லாம் துக்கநிவிர்த்தியும் ஆநந்தபிராப்தியும் விரும்பியே மதநூல்களை விசுவசித்தாரென்பதும், இக்காலத்தார் வேதாந்த சித்தாந்தப் போர்புரிதல் தக்கதன்றென்பதும், வேதமும் ஆகமமும் பதிவாக்காகிய பிரமாண நூல்களென்பது திருமந்திர முதலியவற்றானே பெறப்படுமென்பதும், சிவஞானமுனிவர் வேதாகமப் பிராமாணியம் நிலைநாட்டியுளாரென்பதும், வேதாந்த சித்தாந்தங்களின் பெயர்க் காரணமிவை யென்பதும், பிரஹ்மமீமாம்சையைக்குறித்து யார்யார் எவ்வெவ்வகையான அபிப்பிராயங்கொள்ளினும் வியாசமுனிவர் வேதமுழுதுணர்ந்த நிகரற்ற பெருமையாளரேயென்பதும், பின்னுளோர் வேதாந்தத்திற்கு வெவ்வேறு பொருள் கூறினமைக்குக் காரணம் உபநிடதங்களின் வேறுபாடாகவிருக்கலாமென்பதும், அது சிவஞானமுனிவர்க்குடன்பாடென்பதும், தன்னையுணர்ந்தே தலைவனையுணரவேண்டுமென்று இருவகைநூல்களுங் கூறுகின்றனவென்பதும், "தான்" என்னுஞ் சொல்லும் "ஆன்மா" என்னுஞ்சொல்லும் இவ்விரண்டு பொருள் தருதலை யூகித்துணரவேண்டுமென்பதும், "ஆன்மா ஏகன்" என்பதற்கு மெய்கண்டார் கூறிய பொருளின்னதெனபதும், சிவோஹம் பாவநாநிலையை வேதாந்தப் பொருளாகச் சித்தாந்தங் கூறுகிறதென்பதும், கருடபாவனையாவதிதுவெனபதும், ஆன்மா, பாவனையின் வண்ணமாமென்ற வுண்மை பகவத்கீதையிலுங் கூறப்பட்டுள்ளனவென்பதும், வேதாந்த சித்தாந்தங்களைக் குறித்துத் திருமந்திரங்

கூறுவன இவையென்பதும், சிவனுடைய அநாதிநிலைமை எந்த வேதாந்த நூலும் மறுக்கவில்லை யென்பதும், கண்ணுடைய வள்ளலார் இருமதங்களையும் பற்றிக்கொண்டவபிப்பிராயமிவையென்பதும், உண்மையில் இருவரும் கலகம் விளைத்தற்குக் காரணமின்றென்பதும், திருவருளை முன்னிட்டுச் செல்லின் மெய்யநுபவஞ் சித்திக்குமென்பது ஆசிரியர் பலருக்கும் உடன்பாடென்பதும், பிறவும் நன்கு விளக்கப்பட்டன.

சந்ததமு மெனதுசெய லினதுசெயல் யானெனுந்
தன்மைநினை யன்றி யில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவ மிதுவே
இந்தநிலை தெளியநா னெக்குருகி வாடிய
வியற்கைதிரு வுள மறியுமே
இந்நிலையி லேசற் றிருக்கவென் றால்மடமை
யிதசத்ரு வாக வந்து
சிந்தைகுடி கொள்ளுதே மலமாயை கன்மந்
திரும்புமோ தொடு வழக்காய்ச்
சென்மம்வரு மோவெனவும் யோசிக்கு தேமனது
சிரத்தையெனும் வாளு முதவிப்
பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந் தந்தெனைப்
பாதுகாத் தருள் செய்குவாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணாநந்த மே.

சுபம்.

மு. வேங்கடசாமி நாட்டார்.

## சிலந்திப் பூச்சி.

நம்மைச் சுற்றிலும் வாழும் ஜீவராசிகளில் சிலந்தி ஒன்றாகும். இதை ஸாதாரணமாய்ச், சுவர்களின் ஓரங்களிலும், புல்தரைகளிலும், புஷ்பங்களிலும் பெரிய மரங்களிலும் இன்னும் நூற்றுக்கணக்கான மற்ற விடங்களிலும் அந்தந்த இடத்திற்கேற்ப வித்யாஸங்களுடனே காணலாம். இவைகளையே எட்டுக்கால் பூச்சியெனவுஞ் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். இதற்கு எட்டுக்கால்கள் இருப்பதினாலும், நம்மவர்கள், ஊரும் எல்லாச் சிறு ஜீவராசிகளையும் பூச்சி என்ற பெயரால் அழைப்பதினாலும், காரணப்பெயராக இதற்கு எட்டுக்கால் பூச்சி யென்ற பெயர் வந்தது. இவைகள் பூச்சிவர்க்கங்களின் உறுப்புக்களை உடையனவாகக் காணப்படவில்லை. பூச்சிகளுக்கு மீசைகளும் இறக்கைகளும் உண்டு. மேலும், அவைகள் ஆறு கால்கள் உடையன. அப்படிப்பட்ட உறுப்பின் அமைப்புகளும், கை கால் அமைப்புகளும் சிலந்திக்குக்கிடையா. இவைகள் எண் கால் உடையன. ஆகையால் சிலந்தியானது பூச்சி வர்க்கத்தைச் சேராத ஒரு பிராணி. பூச்சிக்குத் தலை, மார்பு, வயிறு என மூன்று பிரிவுகள் இருப்பனபோலச் சிலந்திக்குக்கிடையா. சிலந்திக்கோ, தலையும் மார்பும் ஒன்று சேர்ந்து ஒரு பாகமாகவும்,வயிறு ஒரு பாகமாகவும் ஆக இரண்டு பாகங்கள்தான் உண்டு! இவைகளின்முன் பாகத்தின்பக்கங்களிலிருந்து நாலுஜோடிக் கால்கள்புறப்படுகின்றன. இக்கால்கள் நீட்டவும் மடக்கவும் கூடிய ஒட்டுக்கால் அமைப்புடன் உள்ளவை. தன் இரையைப் பற்றும் பொருட்டு ஒரு ஜோடி முன்கையும், ஒரு ஜோடி நகமும் உண்டு. தலையின்மேல் நாலு ஜோடிக் கண்கள் இரண்டு வரிசையாக உள்ளன. இதனால் தான் எட்டுக்கண் விட்டேரியும் எனப் பெரியோர்கள் கூறியுள்ளார் போலும். வயிற்றின் கீழ்ப்பாகத்தில் நூல் நூற்கும் இரண்டு, நான்கு, ஆறு விரல்கள் (Spinners) காணப்படும்.

2. சிலந்திகள் நால்வகைப்படும் (1) சில ஜாதிச் சிலந்திகள் நீரில் கூடுகட்டிக்கொண்டு வாழும். அக்கூட்டின் துவாரம் கீழாக

வும், முகடு மேலாகவும் இருக்கும். ஜலத்திற்கு வெளியே வந்து தன் வயிற்றின் அடிப்பாகத்தில் காற்றை அடக்கிக்கொண்டு, கூட்டின் துவாரத்தின் கீழ்ச் சென்று, தான் அடக்கிக்கொணர்ந்த காற்றைக் குமிழியாக உள்ளே செலுத்தும். இவ்விதம் தான் வசிக்கும்படியாகக் கூட்டின் மேல் பாகத்தில் காற்று தங்கும்படி செய்யும். ஜலத்தின்கண் உள்ள சிறு ஜீவராசிகளை இச்சிலந்தி பிடித்துத் தின்னும்.

(2) சில் சிலந்திகள், தரையில், கதவுடன் அமைக்கப்பட்ட குழாய் போன்ற வீட்டைக் கட்டிக்கொண்டு, பூச்சிகளைப் பிடித்து உண்டு ஜீவிக்கும். இச் சிலந்தியானது மூடியைக் கெட்டியாகக் கைகால்களால் பிடித்துக்கொண்டேயிருக்கும். நாம் அந்த மூடியை வெளியே திறக்க முயன்றால், சிலந்தியானது மூடியை உள்ளே வேகத்துடன் இழுத்துக்கொண்டு திறக்கவிடாது. இப்படி இது மூடியின் அருகேயே நிற்பதால், மேலே ஏதேனும் பூச்சி ஊர்ந்தால் இதன் அறிவுக்கு எட்டும். உடனே வெளியே வந்து அப்பூச்சியைக் கூட்டுக்கு இழுத்துக்கொண்டுசென்று, பிறகு பக்ஷிக்கும்

(3) ஒருவகைச் சிலந்தி தத்தித் தத்திப் பாய்ந்து ஈக்களை விஷநகங்களால் கொன்று தின்னும். அதுதான், நாம் ஸாதாரணமாய் ஈப்புலி என்பது. இவ் வழக்கமுள்ள பெரிய சிலந்திகள் பக்ஷிகளைக் கூடப் பிடித்துத் தின்னும். இது அடர்ந்த காடுகளில் உள்ளது.

(4) இன்னும் சிலஜாதிச் சிலந்திகள், தங்களுக்கு ஆகாரம் எளிதில் கிடைக்கும்பொருட்டு, வலைவீசிப் பிராணிகளைப் பிடிக்கும் வேடர்களைப்போல், வலை கட்டி ஆகாரம் தேடுகின்றன. இந்தஜாதிச் சிலந்தி தன் உடலின்பின்புறத்திலிருந்து பெருகும் நூலால் வலையைச் சதுரமாகவும், வட்டமாகவும் பின்னுகின்றது. முகடுகளில் ஒட்டடையென்று சொல்லப்படும், வலைகள் ஒருவகை. மற்ற இடங்களில் வட்டமாய்க்காணப்படும் வலைகள் மற்றொருவகை. இவ்வலைகளில் இரண்டுவகை நூலைக்காணலாம். ஒன்று வலையைப் பலப்படுத்தும் பொருட்டு நூற்ற கெட்டி நூல்கள். இவைதான் பட்டுப்பூச்சி நூல்போல பட்டாக உபயோகத்திற்கு வருகின்றன. இவைகளுக்கு, தூங்கும்

காலத்தில் மாத்திரம் பசைத்தன்மை உண்டே ஒழிய, பிறகு அவைகள் பளபளப்புள்ள பட்டாகத்தான் விளங்கும். மற்றொருவகை நூற்கள் தான் பசைப்பற்றுடையன. இவைகளின் சேர்க்கையினாலே தான் வலைக்கே பசைத்தன்மை உண்டாகி,சிறுபூச்சிகள் அவைகளை ஸ்பரிசிக்கவே ஒட்டிக்கொள்ளும். இந்த நூலில் பூச்சிகள் விழுந்து, ஒட்டிக்கொண்டவுடன், சிலந்தி அவைகளை ஓடிப்பிடித்துத் தன்விஷ நகங்களால் கொன்று தன்னுடைய பட்டு நூலால் கட்டி சாவகாசமாய்த் தனக்கு வேண்டும்பொழுது அவைகளைத் தின்னும். சிலந்தியில் ஆண்பெண் தனித்தனியாகக் காணலாம். இவைகளில் நபும்ஸகலிங்கம் கிடையாது. பெண் ஆணைவிடப் பெரிது. ஆணானது தனது ஸாமர்த்தியத்தால் பிழைக்கவேண்டியிருக்கிறது. பெண் சிலந்தி மிகக் கோபமுள்ளது. சில சமயங்களில் ஆணின் உயிருக்கு மோசம் நேரிடும். சில பெண் சிலந்திகள் ஆணைக்கொன்று தின்றுவிடுகின்றன. இத்தகைய கொடுமை எல்லாச் சிலந்திகளிடமும் காணப்படுவதில்லை. மற்றைய ஜாதியில் ஆணும் பெண்ணும் ஒரே மாதிரியான ஆகிருதியை உடையன. சண்டை நேரிட்டாலும் ஒன்று அல்லது இரண்டு கால்கள் ஒடிந்துபோகலாம். ஆனால் உயிருக்குச் சேதமில்லை. ஆண் சிலந்திகள் பரிதபிக்கத்தக்கதான நிலைமையில் இருக்கின்றன.இவைகள் அழகுள்ளவையாகவும் இல்லை. ஆண்பெண் சங்கமம்அபாயத்தை விளைவிக்கிறது. இது நிற்க,

தென் ஆப்பிரிக்காக் கண்டத்தில் ஒருநாட்டில் ஒரு ஜாதிமனித வர்க்கமுள்ளது. அவ்வர்க்கத்தினர் மனிதனை மனிதன் தின்னும். சுபாவமுடையவர். ஒரு சமயத்தில் ஒரு புருஷன், தன்னுடைய ஸ்த்ரீ அதிகக் கொழுப்புள்ளவளாக இருத்தலைக் கண்டு, அவளைத் துண்டம் துண்டமாகக் கிழித்து முழு உடலையும் உண்டானாம். ஒரு கிறிஸ்தவ பாதிரியார், அது பாதகமானதே! அப்படிச்செய்யலாமா! என்று கேட்டதற்கு, புண்ணியம் பாவம் என்பவைகளின் வித்யாஸம் உணராதவனாகையால், அவள் மிகவும் ருசியாக இருந்தாள், ஜீர்ணமும் செய்துபோட்டேன் என்றான். அவன் மநத்தில் ருசி உள்ளது நன்மை, ருசியில்லாதது தீமை என அறிந்தானேயன்றி. வேறு எண்ணம் அவனுக்குண்டாகவில்லை. இத்தன்மையான மனி

தனைவிட இந்தச் சிலந்திப் பூச்சியின் தர்மம் தாழ்ந்தது என்று எவ்விதம் கூறுதல் கூடும்?

சங்கமமான சில தினங்களுக்குப் பிறகு, பெண் சிலந்தி பட்டுப் பையில் முட்டையிடுகின்றது. இம்முட்டை குஞ்சாக வெளிவர ஒரு பக்ஷம் செல்லும். இம்முட்டைகள் கடுகளவுதா னிருக்கும். தாய் அதைத்தன் வயிற்றடியில் பந்தோபஸ்தாக வைத்துக்கொண்டு திரியும். குஞ்சுகள் வெளிவந்தவுடன் தாயின்மேல் ஏறி உட்கார்ந்துகொள்ளும். அக்குஞ்சுகள் இரண்டு மூன்று தரம் கவசம் மாற்றும் வரை ஆகாரம் எடுத்துக்கொள்வதாகக் காணப்படவில்லை. குஞ்சுகள் பெரிதாகித் தாயுடன் இரைதேடச் செல்லுகின்றன. தாயானது அப்பொழுது இரைதேடித் தன் குஞ்சுகளுக்குக் கொடுக்கும். இன்னும் கொஞ்ச நாட்களுக்குப் பின்பு, குஞ்சுகள் தனித்தனியாக வலை கட்டிக் கொள்ளும். தானே இரை தேடும். தாய்ப்பூச்சி மூர்க்கமுள்ளதாக இருந்தபோதிலும், தன் குஞ்சுகளிடத்தில் அதிக அன்புண்டு. சிலந்தியானது நமக்குச் சிறு பூச்சிகளால் உண்டாகும் கெடுதியைக் கொஞ்ச தூரம் தவிர்ப்பதாகச் சொல்லலாம். சிலந்திப் பட்டை, பட்டுப்பூச்சியால் உண்டாகும் பட்டைப்போல இப்பொழுது வெள்ளைக்கார ஸ்திரீகள் அணியும் கையுறை செய்ய உபயோகிக்கிறார்கள்.

(5) சிலந்தியின் குணாதிசயங்களைப்பற்றி அடியில் வருமாறு ஒருவர் எழுதியுள்ளார்:—

(1) இஃது எறும்பைப்போலச் சுறுசுறுப்புள்ளது. எறும்புகள் கூட்டுறவினால் எவ்வளவோ அற்புதமான காரியங்களைக் கொண்டு செலுத்தும். இது, தனியாகப்பிறர் சகாயமின்றி எவ்விதமான தடைகள் நேரிடினும், அவைகளைவென்று குறித்த கார்யத்தைச்சாதிக்கும் திறலுடையது.

(2) எறும்பைப்போல முன்யோசனையுள்ளது. இது தன்னுடைய வலையில் பல ஈக்கள் விழுந்து சிக்கிக்கொண்டால், ஒவ்வொன்றையும் தனித்தனியாய்ப் பட்டுநூலால் அமைந்த பையில் கவசம் செய்து சாவகாசமாய்த் தான் வேண்டும்போது உணவாக்கிக்

கொள்ளும். ஒரு சமயத்தில் அகப்படும் உணவை வெகு காலத்திற்கு உபயோகமாகும்படி வைத்துக்கொள்ளும்.

(3) இது தன்னுடைய முட்டைகளைப் பந்தோபஸ்தாகக் காப்பாற்றி வைத்துக்கொள்ளும்; அல்லது புத்திசாலித்தனமாய்ச் செய்துள்ள பையில் அவைகளை வைத்துக்கொண்டு அப் பையுடன் திரியும்.

(4) அதின் கணிதசாஸ்திரப் பயிற்சியானது யாவரும் மெச்சும்படியானது. வட்டமான வலைகளை அமைத்தலில் அதன் சாமர்த்தியம் மிகவும் அற்புதமானது. முதலில், தன்னுடைய அடிவயிற்றிலுள்ள பையிலின்று பசையுள்ள நீரை ஆகாசத்தில் பீச்சும். அது ஒரு நூலாகி, யாதேனும் ஒரு கட்டை, சுவர், இலை முதலியவற்றைப் பற்றும். அது சரியாய்ப் பற்றியிருக்கிறதா என்று இஃது இழுத்துப்பார்க்கும். பின்பு அதன் மேல் நடந்துபோகும். மறுபடியும் அந்தப் பசையுள்ள நீரைப் பீச்சும். அதுவும் நூலாகி அவ்விதமே ஒரு கட்டையைப் பற்றும். இவ்விதம் முக்கோணமாக மூன்று நூல்களைக் கட்டிக்கொண்டு, அதன் பின் உள்ளடங்கியதாக வட்டமான வலையைச் சுற்றிச்சுற்றி வனையும். சிலந்திப்பூச்சியின் வலையின் அமைப்பினும், தேன்கூட்டின் அமைப்பினும் உபயோகிக்கப்பெறும் நுட்பமான புத்தியின் திறமையைப்பற்றி நினைக்குந்தோறும் ஈசுவர சைதந்யத்தின் விலாசம் பிரகாசிக்கும்.

(5) ஓரோர் சமயத்தில் முகட்டிலிருந்தும், அல்லது மரத்திலிருந்தும், நூலைத் தன் அடிவயிற்றுப் பையினின்று இழைத்துக்கொண்டு கீழே இறங்கும். அப்போது, யாதேனும் ஒரு தடை நேரிட்டால், உடனே அந்நூலைத் தன்னுள் திரும்ப ஏற்றிக்கொண்டு, மிக விரைவாய் ஏறிப்போய்த் தான் இறங்கிவந்த ஸ்தானத்தைப் பற்றும். இதற்கு உபமேயமாக, ஈசுவரன் உபாதாந காரணனாகவும், நிமித்த காரணனாகவும் இருக்கிறான், என்று உபநிஷத்துகள் கூறுகின்றன. *

---

* சுவேதாசுவதரோபநிஷத், 6-வது வல்லி, 10-வது மந்த்ரம்; 3-வது வல்லி, 1-வது மந்த்ரம் இவைகளைப் பார்க்க.

(6) தான் கட்டும் வலையின் மையத்தினின்று, தன் இல்லத்தின் நாற்புறமும் சுற்றிக் கண்ணும் கருத்துமாயிருக்கிறதைக்கண்டு, ரிஷிகள், ஈசுவரனும் தன்னுடைய ஸ்ருஷ்டியின் மையத்திலின்று கொண்டு கண்ணும் கருத்துமாக இருக்கிறதாக உபநிஷத்துக்களில் உவமித்திருக்கின்றார்கள். இருவிதமான பட்டுநூற்களை இது நூற்கும். தான் நடக்கிறதற்கு உலர்ந்த நூலையும்; மற்றைய பூச்சிகள் விழுந்து சிக்கிக்கொள்வதற்கு பிசுக்கென்று ஒட்டும் நூலையும் இழைத்து உற்ற இடங்களை அமைத்துக்கொள்ளும். இதில் கொஞ்சமேனும் பிசகாமல் தன்னுடைய பாதைக்கு ஏற்பட்ட நூலை அதற்கும், மற்றைய பூச்சிகளைப் பிடிப்பதற்கு ஏற்பட்ட நூலை அதற்கும் உபயோகித்துக்கொள்ளும். நீண்ட குழலாய்க் கூடுகட்டும்போது, அதன் உட்புறம் மிருதுவாயும் வெண்மையாயுமுள்ள பட்டால் அமைந்திருக்கும், கூடுகட்டாத சிலவர்க்கச் சிலந்திப் பூச்சிகள் தங்களுடைய இரையைத் தேடுவதிலும் பிடிப்பதிலும் பலவித உபாயங்களை மனிதனைப்போல் உபயோகிக்கின்றன. சில சமயத்தில் தன்னுடைய எதிரி பலிஷ்டனாக இருப்பான். அத்துடன் போர்புரிதல் மிகவும் அற்புதமாக இருக்கும்.

(7) ஒருவகைச் சிலந்திப்பூச்சி சிறு பக்ஷிகளைப் பிடித்துத் தின்னும் சக்தியுள்ளதாக அவ்வளவு பெரிதாக இருக்கிறது. இஃது அடர்ந்த பெருங்காடுகளில் உள்ளது. இந்த வர்க்கப்பூச்சிகள் முக்யமாய்த் தென்னமெரிக்காவிலுள்ள காடுகளில் அபரிமிதமாய் ஜீவிக்கின்றன.

N. S. ஜம்புநாதன், B. A., L. T., F. M. S.

---

# உபசாந்தம்.

நான் யார்? உலகென்பதெத்தகையது? கடவுளுக்கும் நமக்குமுள்ள வேறுபாட்டிற்குக் காரணமென்ன? நாம் இன்புருவாக விளங்காது துன்புறுவதற்குக் காரணம் யாது? என்றற்றொடக்கத்தனவற்றை நல்லாசிரியரிடத்துப் பணிவாகவிருந்து விசாரிப்பவர் இடைவிடாது விரும்புவது உபசாந்தமேயாம். உபசாந்தமாவது மனம் செவி முதலிய இந்திரியவாயிலாகச் சப்தமுதலிய விஷயங்களிற் சென்று கலக்கமுறுமலொருமுகப் பட்டிருத்தலாம். மனம் ஒருமுகப்பட்டோய்ந்திருக்கும் நிலையினைப் பெறுவது பெருந்தவமுடையார்க்கன்றி மற்றையோர்க்குச் சித்திப்பதொருபோது மின்றாம். மனம் வாயுவின் கூறாகவிருத்தலின், அதனை யொருமுகப்படுத்துதல் மகாமேருவை யெடுத்துக் கடலலை மீதசையாது நிறுத்துவதற்குச் சமமாம். மனம் சஞ்சலமுடையதாயிருப்பதென்று கருதி, அதுபோனவழியே போகாது விழிப்பாகவிருந்து, அஃதிந்திரியங்களின் வாயிலாக விஷயங்களிலோடும்போது அதனை ஓடவொட்டாது தடுத்துவந்தால், அஃதொருவாறு வெளிமுகப்பட்டோடுவதினின்றும் நீங்கி, உள்முகப்பட்டோட முயலுவதாம். மனம் ஆத்மா அநாத்மாவென்னு மிரண்டனுள், யாதாவதொன்றனைப்பற்றி நிற்குமியல்புடையதாகலின், அதனையநாத்மாவைப் பற்றி நிற்காவாறு செய்தால், அஃதாத்மாவைப்பற்றி நிற்றலொருதலையாம். மனம் ஆத்மாவைப்பற்றிப் பிறழாது நிற்றலே உபசாந்தத்தின் பரமப்பிரயோஜனமாம், தேகம் இந்திரிய முதலியவற்றுள் நானென்னும் புத்தியும், மனைவி மக்கள் முதலியோரிடத்து எனதென்னும் புத்தியுமுள்ள பரியந்தம், மனம் ஆத்மாவைப்பற்றியசையாது நிற்றல் முற்றும் கூடாமையின், தேகமுதலிய அநாத்ம பதார்த்தங்களின் தன்மையைச் செவ்விதாக விசாரித்து, அவை எவ்வாற்றானும் தமக்கெனச் சொரூபமுடையனவன்று, அவை ஆத்மாவினிருப்பையே தமக்கிருப்பாகக் கொண்டு விளங்குகின்றன; அங்ஙனமிருப்பினும் அவை மனம் தம்மைப் பற்றும்போதெல்லாம் துன்பந்தருவதற்குச் சோர்வடைவதில்லையென்று பிறழ்வின்றித் தெளிந்தவிடத்து,

மனம் அநாத்மாவின் வசப்பட்டோடுதலொழிந்து, ஆத்மசாவமே பற்றி நிற்பதாம்.

பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் மனமே காரணமா மென்பதொரு தலையாகலின், மனத்தைப் பந்தசாதனமாக்காது, மோக்ஷசாதனமாக்க முயலுதல் மக்களுக்கின்றியமையாத கடமையாம். இது வேண்டுமென்னும் விருப்பமுடைய மனமே பந்தசாதனமனமாம். இம்மனமுள்ள பரியந்தம் உபசாந்தத்தைப் பெறுவது கூடாமையின், வருவது வருக ஒழிவது ஒழிக என்னுந் துணிவோடு ஒன்றையும் விரும்பாதிருப்பதாகிய மனத்தைப்பெற முயலுதல் வேண்டும். இம்மனமே மோக்ஷசாதனமனமாம் மனமோ என்றும் ஓயாது விரும்பியவற்றைப் பெறுவதாலும், உள்ளவற்றை யிழத்தலாலும் சுகத்தையும் துக்கத்தையுமடைந்து கலக்கமுறுகின்றது. அவ்வாறு கலக்கமுறு மனம் உபசாந்தத்தைப் பெறுவது கூடாமையின் அஃதுபசாந்தத்தைப் பெறுதற்பொருட்டு விருப்பையும் வெறுப்பையுமொழித்தல் இன்றியமையாத கடமையாம். விருப்பு வெறுப்புக்கள் காணப்படும் பொருள்களின் றன்மையை யுள்ளவாறறிந்தவிடத்தொழிவனவாக விருத்தலின், ஆத்மாவின்னது, அநாத்மாவின்னதென்று பிறழ்வின்றியுணர்தல் வேண்டத்தக்கதாம். ஆத்மவின்னது அநாத்மாவின்னது என்று மாறுபாடற விசாரித்தல்வாயிலாக விருப்பு வெறுப்புக்களொழிந்தவிடத்து, மனம் கடலைபோன்று கலக்கமுறுவதொழிந்து ஆத்மாவைப்பற்றி நின்று உபசாந்தமடைவதாகும். உபசாந்தமுடைய மனமே ஆத்ம சாக்ஷாத்காரவாயிலாகச் சர்வதுக்க நிவிர்த்தி பரமாநந்தப்பிராப்திவடிவ மோக்ஷத்திற்குச் சாதனமாம். உபசாந்தமுடைய மனமே அருவமனமாமென் ஞானவாசிட்ட முதலிய நூல்களுள் சொல்லப்படுகின்றது அதுவே வாசனைக்ஷயம், மனோநாசம், தத்துவஞானமென்னு மூன்றுமுடையதாம். இம்மனமுடையவர்தாம் ஜீவன் முத்தராவர். மனத்தின்கண் தமோகுணமிகும்போது அஞ்ஞானமயமான மூடவிருத்தியும், ரஜோகுணமிகும்போது இராகமயமான குரோதவிருத்தியும், சத்துவகுணமிகும்போது வைராக்கியமயமான சாந்தவிருத்தியும் உண்டாகின்றன. இச்சாந்தவிருத்தியே உபசாந்தமாம். இவ்வுபசாந்தம்

பிரகாச (ஞான) வடிவமான சத்துவகுணத்தின் மிகுதிப் பாட்டால் வைராக்கியமயமாக வுண்டாவதாகவிருத்தலின், அது சத்துவகுணத்தை மிகுதியாக வுடையவர்க்கே சித்திப்பதாம்.

இவ்வுபசாந்தம் உத்தமம், மத்திமம், அதமமென மூவகைத்தாம்.

1. மனம் யாதொரு பரிணாமமுமின்றிச் சிதாத்மாவில் நிலைத்து, சிதாத்மவடிவமாகவேயிருப்பது உத்தமசாந்தமாம்.

2 மனத்தின் சுத்தசத்துவ பிரஹ்மாகார விருத்திப்பிரவாகமே மத்திமசாந்தமாம்.

3. மனம் விஷய வியாபாரத்தைவிட்டு, வேதாந்த சிரவணத்தில் அழுந்தியிருப்பதே மிசிர சத்துவமென்னும் அதமசாந்தமாம்

இம்மூவகைச் சாந்தத்துள், உத்தமசாந்தமே அமநஸ்கமெனப்படும் நிருவிகற்பநிஷ்டையாம். இந்த நிஷ்டையினைப் பெற்றவரே இனிப்பிறவாத நிலையினைப் பெறுவர்.

சொரூபசாரம்.

சாந்தமே தற்சாட்சி தற்சாட்சி யேபிரமம்,
போந்த பிரமமே பூரனமாம்—ஆய்ந்துணர்ந்த
சுத்தபரி பூரனமே தோன்றுச் சுவானுபவம்
சித்தநிலை தானே சிவம்.

என்று கூறுவதிங்குநன்கூன்றியறிதற்பாலதாம்.

கோ. வடிவேலுசெட்டியார்.

## பத்திரிகை வரவு.

---

**ஸித்தாந்தம்:**—என்பது சைவஸித்தாந்த சபையின் விஷயங்களை வெளிப்படுத்தும் ஓர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. நாளிது௵ ஜனவரீ௴ முதல் வெளிவருகிறதாகத் தெரியவருகிறது. இதன் முதற்பகுதியாகிய ஜனவரீ௴த்துப்பத்திரிகை நாம் சென்ற மே௴ 30உ பெற்றோம். அதில் சைவஸித்தாந்தம், கன்மம், கடவுளின் சொரூபம் இவைகளைப்பற்றிய வியாஸங்களும் சைவஸமாஜத்தின் காரியாதிகளும் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன இத்தகைய பத்திரிகையை நம்தமிழ்நாட்டில் சைவஸித்தாந்தத்தைப் பற்றிய யதார்த்த ஞானத்தைப் பரவச்செய்தற்கு முக்கிய ஸாதனமாகும். பிறமத தூஷணை இல்லாமல் இப்பத்திரிகை நடைபெறுமாகில், மிகவும்பிரயோஜநகரமாக விருக்கும்.

---

**லோகோபகாரி:**—என்பது ஸோமவாரந்தோறும் கோமளேசுவரம் பேட்டையில் ஸச்சிதாநந்த அச்சுக்கூடத்தில் வித்வான் வடிவேலுசெட்டியாரவர்களால் பிரசுரமாகி நடைபெறும் ஓர் உயர்ந்த தமிழ்ப்பத்திரிகை. இதில் வாரந்தோறும் உலகசம்பந்தமான பொது விஷயங்களுடன் உபநிஷத்துக்களின் மொழி பெயர்ப்பும் வேதாந்த சம்பந்தமான ஒரு வியாஸமும் தவறாமல் வெளிவருகின்றன. இப்பத்திரிகை பிரஹ்மக்ஞான தர்சனக் கிளைச்சபை ஒவ்வொன்றும் அத்தியாவசியமாக வாங்கிப்பார்க்கத்தக்கது. ஒவ்வொரு பிரஹ்மக்ஞான சபையைச் சேர்ந்த அங்கத்தினர் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை ஆதரிக்கவேண்டியது முக்கியமானது. வருஷச்சந்தா ரூ—3—8—0 தான்.

பத்திராதிபர்.

---

## சமாசாரம்.

ஓர்அறிவிப்பு:-1907௵ டிசம்பர்௴ 27,28,29,30உ களில் காசி க்ஷேத்திரத்தில் பிரஹ்மக்ஞான சபையின் 32-ம் வருஷோத்ஸவத்தில் அந்நிபெஸண்ட் அம்மையார் யோகசாஸ்திரத்தைப்பற்றி ஆங்கிலத்தில் செய்த நான்கு உபந்யாஸங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று, கையெழுத்துப் பிரதியாக ஆயத்தமாகியிருக்கிறது. இந்தப் பத்திரிகையில் மேற்படி மொழிபெயர்ப்பை மாஸாமாஸம் கொஞ்சங் கொஞ்சமாகப் பிரசுரம் செய்வதாக இருந்தால் சுமார் இரண்டு வருஷம் செல்லும். அதுவும் ஆரம்பிக்கிறதற்கு இன்னும் 6 மாதம் தாமதிக்கும். சில நண்பர்கள் அவ்வளவு தாமஸத்திற்கு இடங்கொடாமல் முழுமையையும் புத்தகரூபமாக அச்சியற்றுதல் நலமாயிருக்கும் என்று தெரிவிக்கிறார்கள். இப்படிச் செய்கிறதாகவிருந்தால், குறைந்த பக்ஷம் காகிதம், அச்சுக்கூலி வகையராவில் ரூ 250 செலவாகும். இப்புத்தகம் சீக்கிரம் வெளிவரவேண்டுமென்று அபிமானிக்கிறவர்கள் முன்

பணமாகப் பணம் கொடுத்துதவுமாறு பிரார்த்திக்கிறேன். அவ்விதம் செய்பவர்களுக்கு புஸ்தகம் வெளிவந்தமேல் உதவிபுரிகிற தொகையின் பெறுமானத்திற்குள்ள புஸ்தகங்களும், 100-க்குப்பத்து வீதம் லாபப் புஸ்தகங்களும் கொடுக்கப்படும். இதுவிஷயத்தைப்பற்றி மதுரை பிரஹ்மக்ஞாந சபையின் அக்கிராசநாதிபதி பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயரவர்களுக் கெழுதிக்கொள்ளலாம். அச்சுப்போட்ட பிற்பாடு புஸ்தகத்தின் விலை 8 அணாவாகும்.

---

புகையிலைக் காகிதம்:—புகைச்சுருட்டு செய்வதில், புகையிலையின் மத்தியில் உள்ளநரம்புகள் பிரயோஜனப்படாமல் ஒதுக்கப்படுகின்றன. இப்போது, அவ்வொதுக்கிய நரம்புகளை காரமான ஸோடா (Caustic) ஜலத்தில் ஊரவைத்து, மெல்லியவைகளாக ஆக்கி, பின்பு அறைத்து கூழ்போல செய்து, காகிதங்களை உண்டுபண்ணும் இயந்திரங்கள் மூலமாய், காகிதங்களாகச்செய்கின்றார்கள். ஊராக்காகிதமும் புகையிலை சத்தாக இருக்கின்றமையால், புகையிலைச்சுருட்டாக இக்காகிதங்களை சுருட்டுகின்றார்கள். புகையிலை ஸ்தானத்தில் இக்காகிதங்கள் உபயோகமாகின்றன.

---

கும்பாபிஷேகங்கள்:—சென்றமீ 26-உ ஞாயிற்றுக்கிழமை மதுரையில் ஆற்றின் வடகரையில் உள்ள திருவாப்புடையார்கோவிலில் திருப்பணி வேலை நிறைவேறிக் கும்பாபிஷேகம் நடந்தது. பொதுஜநங்களுடைய திரவிய சகாயத்தாலும், மதுரை தேவஸ்தாநத்தின் திரவியசகாயத்தாலும் ஷை. காரியம் நடைபெற்றது. மதுரைக்கு கீழ்பால் 18 மைல் தூரத்திலுள்ள திருப்பாச்சேத்தி என்னும் க்ஷேத்திரத்தில் சிவன் கோவிலில் ஸ்ரீ-மாந். சு. மு. சுப்பையாபிள்ளையவர்களுடைய நன்முயற்சியால் திருப்பணிவேலை நடத்தப் பெற்றுச் சென்றமீ 26-உ ஞாயிற்றுக்கிழமை யன்று கும்பாபிஷேகம் நடந்தது. அதேதிநத்தில் மதுரைக்குமேற்கில் 1½ மைல் தூரத்திலுள்ள திருமங்கல க்ஷேத்திரத்திலுள்ள சிவன்கோவில் சகீசுவரமூர்த்தி கோவில் புதுப்பிக்கப் பெற்றுக் கும்பாபிஷேகம் நடந்தது. மூன்று கும்பாபிஷேகங்களும் யாதொரு விக்நமுமின்றி நேர்மையாய் நடந்தன.

---

ஸ்ரீ ஞாநசம்பந்த மூர்த்திகளின் குரு பூஜை நாளிதுமீ 1உ திநம் விமர்சையாய் மதுரை திருஞானசம்பந்தமூர்த்தி மடாலயத்தில் நடை பெற்றது. ஏழைகளுக்கு அன்னமிடப்பட்டது. ஸ்ரீஞாநசம்பந்த ஸ்வாமியின் அவதாரமஹிமையையும் வரலாற்றையும் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய உயர் நலம் அமைந்த பாசுரங்களில் முக்கியமான100பாசுரங்களையும் ஒருசிறு புத்தகமாக அச்சு இயற்றி, அப்பிரதிகளை விஸ்தாரமாக விநியோகம் செய்தால் மிக்

வும் நலமாக இருக்கும். இதில் ஒருவிஷயம் கவனிக்கத்தக்கது. பிறமதநாஷ ணையை முற்றும் தவிர்க்கவேண்டும். வருகிற வருஷ குருபூஜை தினத்தில் மதுரை திருஞான சம்பந்த மடாதிபதி அவர்கள் இவ்வேண்டுகோளை நிறை வேற்றுவார்கள் எனநம்புகிறோம்.

---

டாக்டர் ரிச்சேர்ட்ஸன்:—காளிதமீ 1உயில் காசிநகரத்தில் டாக்டர் ரிச்சேர்ட்ஸன் என்பார் மரணமாயினர். இதுமிகவும் வியசனகரமானசமாசா ரம். காசியின்கண்ணுள்ள ஹிந்துபிரதான வித்தியாசாலையில், யாதொரு சம் பளமின்றி (1898—1909) 11வருஷ காலம், தலைமை உபாத்தியாயராக இருந்து மிகவும்ஊக்கத்துடன் அதன் காரியாதிகளைநன்றாய்நடத்தி வந்தார். ரஸாயன சாஸ்திரத்தில் அதிகப்பாண்டித்தியம்பெற்றவர். ஹிந்துவாலியர்களின்மேல் அதிக அன்பு வைத்திருந்தார். பக்ஷவாதம் என்ற கொடியரோகால் பேசும்சக் தியை இழந்தமையால் 1909வரு அக்டோபர் முதல் அந்த வேலையை விட்டு விலகிக் கொண்டார். பின்புவரவர அவ்வியாதி முற்றியது. சிலமாதங்களாய் படுத்தபடுக்கையாயிருந்தனர். இவர் நம் தேசத்தினர்களுக்கு பாடுபட்ட ஆங் கிலஉத்தமர்களில் ஒருவர். காசிவித்தியாசாலைக்கு இவர் செய்த கைங்கர்யத் தின் ஞாபகச்சின்னமாக ஒரு மார்பிள் சலவைக்கல்லில் அவர் பெயர் முதலி யவை வெட்டப்பட்டிருக்கின்றன.

---

மதுரைத் தமிழ்ச்சங்கம்:—பதினோராம் முறை இச்சங்கத்தின் கூட் டம், சென்றமீ 24, 25, 26உகளில் சேதுபதி பள்ளிக்கூடக் கட்டிடத்தில் கூடியது. ஸ்ரீமான். ராவ்பகதூர் ஆறுமுகம்பிள்ளை அவர்கள் (இராமநாத புரம்டிஸ்டிரிக்ட் டிப்டிகலெக்டர் அவர்கள்) சபையின் அக்கிராஸநம் வகித்தனர் பலவித்வான்கள் வந்திருந்தனர். பல விஷயங்களைப்பற்றிய உபந்நியாஸங் கள் நிகழ்ந்தன. சபையின் ஸ்தாபகரான ஸ்ரீமான் பாண்டித்துரைசாமித் தேவரவர்கள் இவ்வருஷக் கூட்டத்தில் இல்லாமையே பெருங்குறை. மகா-ள-ள-ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய ஐய்யர் அவர்கள், சங்கத்தின் அக்கி ராஸநாதிபதியாக சபையாரால் தெரிந்தெடுக்கப்பெற்று நியமநம் செய்யப் பட்டிருக்கிறார்கள். சபை அவர்களுடைய ஆளுகையில் மேன்மேலும் அபிவிருத்திபெற்று, நற்காரியங்களைச் செய்வித்து நம் தமிழ் உலகத்திற்கு சிரேயஸ்ஸை செய்விக்கும்படி இறைவன் அருள் அதற்கு பூர்ணமாய்ப் புரிவார் என நம்புகிறோம்.

---

மாமிசத்தினின்று பட்டுநூல் செய்தல்:—ஜர்மானியா தேசத்தின் ரஸா யன சாஸ்திரியார்ஒருவர், இறந்துபோன குதிரை மாமிசத்தை சில திராவக ங்களால் பிறித்து, நூலிழைபோன்ற மெல்லிய பளபளப்பான வெண்மை

யான நரம்புகளை உண்டுபண்ணுகிறார். அவைகளைச் சிலசாமான்களால் பதனிட்டு பக்குவப்படுத்தி பட்டாக அமையும்படி செய்கின்றார். இப்பட்டு நூற்கள் காட்டிலுள்ள பட்டுப்பூச்சிகளால் உண்டாக்கப்படும் பட்டைப் போலவும் இரண்டு அங்குலம் நீளமுள்ளவைகளாகவும், உறுதியாகவும் நீடித்தகாலம் இருக்கக்கூடியவையாகவும் இருக்கின்றனவாம். இப்பட்டு நூற்களால் செய்த வஸ்திரங்களின் இழை நெருக்கமாக இருக்கின்றமையால், காற்று, ஜலம் முதலியவைகளை வெளிப்போகாமல் வைத்துக்கொள்ள பைகள் முதலியன செய்யக்கூடியதாக இருக்கிறது. ஆகாச கூண்டுகள் முதலியவைகளுக்கு இப்பட்டுநூற் பை முதலியனவைகள் மிகவும் உபயோகமானவை.

---

**கனம் தங்கிய திவான்பஹதூர் ரகுநாதராவ் அவர்களின் மரணம்.**— சென்றமீ 3உயில் பிரஹ்மஸ்ரீ திவான் பஹதூர் ரகுநாதராவ் அவர்கள் மரணமாயினர். மரணகாலத்தில் அவர்களுக்கு வயது 81. பிரஹ்மஞானசபையில் ஒரு அங்கத்தினராக இருந்தனர். வைதீக, லௌகீக விஷயங்களில் அகன்ற அறிவினர். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டில் உயர்ந்த உத்தியோகத்தை வகித்து இண்டோர் (Indore) ராஜாங்கத்துக்கு மந்திரியாக விருந்து பின்பு பென்ஷன் பெற்று மைலாப்பூரில் அநேகவருஷங்கள் தங்கியிருந்து இப்பால் கும்பகோணத்தில் வசித்தனர். பென்ஷன் பெற்ற பிற்பாடு நம்மவரில் அநேகரைப்போல் பெருந்தூக்கத்தை எதிர்பாராமல், என்றும் சிரஞ்சீவி என நினைப்புள்ளவராய் தீரத்தன்மையான மனத்துடனே பொதுஜநநலம் பயக்கும் அநேகநற்காரியங்களில் தலையிட்டு நடத்திவந்தனர். இப்பால் தஞ்சாவூர்ஜில்லாவில் பொதுஜநஸபையை ஸ்தாபித்து அதன் மூலமாய் அந்தஜில்லாவின் ராஜாங்கமுறையில் ஜநங்களின் குறைகளையும் கஷ்டநிஷ்டூரங்களையும் சர்க்காருக்கு அப்போதைக்கப்போது தெரிவித்து, அந்த ஜில்லாவிலுள்ள ஜநங்களுக்கு அநேகநன்மைகளை விளைவித்தனர். நம்முடைய விவாகவிஷயங்களில் நடைபெற்றுவரும் சாஸ்திரவிரோதமான அக்கிரமங்களைப்பற்றி நம்மவர்கட்குப் பன்முறை விஸ்தாரமாக எடுத்துக்காட்டியும் சீர்திருத்த விதத்தையும் அறிவித்து வந்தனர். நமது ஆசாரவிஷயங்களிலுள்ள தவறுகளை திருத்தம் செய்யும்படி முயற்சித்து வந்தனர். ராஜாங்க சம்பந்தமாக அநேக துறைகளிலும், ஏனைய லௌகிக துறைகளிலும், வைதிகவிஷயங்களிலும் பலமுறை ஆங்கில தினவர்த்தமானப்பத்திரிகைகள் மூலமாய் தம்முடைய அபிப்பிராயங்களை தாக்ஷிண்யமின்றியும் தைர்யமாயும் வெளியிட்டுவந்தனர். பொதுஜந கைங்கர்யமே தாம் தலைமேற்கொண்ட தர்மமென மதித்து சுறுசுறுப்பாய் நம்தேசத்திற்குப்

பலவழிகளில் பாடுபட்டுவந்தனர். பிறமதத்துவேஷமில்லாதவர். முக்கியமாய் பகவத்கீதையையும் பாகவதத்தையும் தினந்தோறும் தவறாமல் வெகு சிரத்தையுடன் பாராயணம் செய்துவந்தனர். மதக்கொள்கையில் அவர்கள் வைஷ்ணவராக விருப்பினும் எல்லாமதஸ்தர்களிடமும் அன்பும் ஆதரவும் சிநேகமுமுள்ளவராய் இருந்தனர். அநேகவருஷங்களாக உலகத்தில் இருந்ததினால் எத்தனையோ சுகதுக்கங்களை அநுபவித்தும் அவைகளால் மனச்சஞ்சலம் பெறாமல், எப்போதும் மலர்ந்தமுகத்தினராய் அவருடன் சம்பாஷிக்கும் ஒவ்வொருவரையும் பிரியப்படுத்தியும் உற்சாகப்படுத்தியும் வந்தனர். ஆதிகாலத்தில் நம்தேசத்தில் பீஷ்மாசார்யாரைப்போல இக்காலத்தில் இப்பெருந்தகையர் தம்மிடம் லௌகிக வைதிக ஆசாரம் முதலிய விஷயங்களில் ஆலோசனை செய்பவர்களுக்கு உற்றபடி ஸத்திய ஸந்தராய் தாம் கொண்ட கருத்துக்களை வெளியிடுவர். அவர்களை நல்வழிப்படுத்தவும் முயலுவர். அவரவர்கள் பொதுஜன விஷயமாக என்னமுயற்சி செய்கிறார்களோ அம்முயற்சிகளில் இன்னும் அதிக ஊக்கத்துடன் வேலைசெய்யும்படி விநயமாய்த் தூண்டுவார். அவர்களின் அகன்ற அறிவையும் நீண்ட உலக அநுபவத்தையும் உணர்ந்து சென்னை கவர்னரவர்களாகிய கனந்தங்கிய ஸர் ஆர்தர்லாலி என்பார், சென்னை சட்ட நிர்மாணசபையில் ஒருஅங்கத்தினராக நியமனம்செய்தார்கள். அந்தஸ்தானத்தில் இருந்துகொண்டு ஜனங்களுக்கு அநுகூலமான பல நற்காரியங்களைப்பற்றி சமயோஜிதமான கேள்விகள் மூலமாய் நலம் பிறப்பித்தனர். இவர்களது மரணத்தில் சென்னை ராஜதானிமுழுவதும் எல்லாஜாதியாரும் விசநமுற்றனர். இவர்கள் உயர்ந்தகர்மயோகி. உலககைங்கர்யம் செய்தலே ஈசுவர ஆராதனையாமென்றுணர்ந்து நலம் பல புரிந்து நடைபெறவா ராயினர்.

---

**கறுப்பான நக்ஷத்திரங்கள்**:—சுவப்பிரகாசமுள்ள நக்ஷத்திரங்களை அறிவோம். அவை எண்ணிறந்தன. சில வருஷங்களாக, பிரகாசம் பொய்த்துப் போய், பூமி போன்றுள்ள நக்ஷத்திரங்களை வான சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவைகள் மஹாவேகமாகச் செல்லுகையில், ஒன்றோடொன்று மோத, அவைகளின் திரவியங்கள் ஆவி (Gas) யான நிலைமை

யைப் பெறுகின்றன. அவைகள் ஆகாசத்தில் குமிழிபோல் மிதக்கின்றன. அவைகளுக்கு ஆங்கிலத்தில் நேபுலா (Nebula) என்று பெயர். இவைகளின் ஆவிமயமான திரவியங்கள் ஸ்தூலித்து இறுகிக் கெட்டியாக பரிணமிக்கும்போது, வெண்மையான சுவப்பிரகாசமுள்ள நக்ஷத்திரங்களாக அமைகின்றன. நாளடைவில் இவைகளின் பிரகாசம் வர வரக் குறைவுபட, பச்சை, மஞ்சள், செவப்பு வர்ணமுள்ள நக்ஷத்திரங்களாக மாறுகின்றன. பின்பு பிரகாசம் முற்றும் போய்விடவே, கறுத்த நக்ஷத்திரங்களாக ஏற்படுகின்றன. பின்பு இக்கறுத்த நக்ஷத்திரங்களே முன் பிரஸ்தாபித்தபடி ஒன்றோடொன்று மோத மேற்கண்ட பரிணாமங்கள் நிகழ்கின்றன. இதுவே பிரபஞ்சத்தின் இயல்பு. "பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும், தோன்றின மறையும், மறைந்தன தோன்றும், பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும், ................" என்றார் பட்டினத்தார். நம்முடைய சூரியமண்டலமும் அதைச் சேர்ந்த கிரகங்களும் இவ்வாறே அமைந்திருக்கின்றன. சூரியனைச் சுற்றியுள்ள இப்போது இருண்ட கிரகங்கள் ஓர் ஸமயத்தில், முன்னர் ஸ்வப்பிரகாசமுள்ளவைகளாக இருந்தன. பின்பு வர வரப் பிரகாசம் குன்றிக் கடைமுறையில் சொந்தப் பிரகாசமில்லாத கறுப்பான கிரகங்களாக இப்போது இருக்கின்றன. சந்திரன், புதன் சுக்கிரன், குரு, செவ்வாய், முதலிய கிரகங்களுக்கு இப்போதும் பிரகாசமிருக்கிறதே என்றாலோ, அப்பிரகாசம் அக்கிரகங்களின் சொந்தமானதன்று. சூரியனின் பிரகாசம் அந்தந்தக் கிரகங்களில் விழுந்து பிரதிபிம்பிக்கப் பெறுகிறது.

இக்கிரகங்களைப் போலவே, சூரியனும் தன் பிரகாசமும் உஷ்ணமும் வர வரக் குன்றி பொய்த்துப்போக, கறுப்பான நிலைமையைப் பெறும். சூரியன் முன் ஒரு காலத்தில் சுத்த வெண்மை நிறமுள்ள பிரகாசமுடையதாக இருந்தது; பிரகாசம் குறையவே இப்போது, மஞ்சள் நிறமுள்ள பிரகாசமுடையதாக இருக்கிறது. இனி, அந்நிறம் போய், அதன் பிரகாசம் சிவப்பு வர்ணமுள்ளதாக மாறும். பின்னர் அதுவும் போய் பிரகாசம் உஷ்ணமிரண்டுமில்லாத அணைந்த அடுப்புப்போல சூரியன் ஏற்படும். அப்போது இந்த பிரஹ்மாண்டத்திற்கு மரணம் அதாவது பிரளயம் உண்டாகும்.

ஆகாயத்தில் தோன்றும் ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒரோர் சூரியமண்டலமாம். அவைகளின் கதியும் இதுவே. ஒரு சூரியமண்டலம் அழிந்துபோக வேறு ஒரு சூரியமண்டலம் தோன்றும். பிரபஞ்சம் என்பது ஒரு ஸமுத்திரம் போன்றது. அதில் பல அலைகள் உண்டாகி மறைகின்றன, ஒவ்வொரு அலையும் ஓர்ஓர் சூரியமண்டலமென எண்ணலாம். இது நம்முடைய ஞானசாஸ்திரங்களின் சித்தாந்தம்.

பத்திராதிபர்.

குறிப்பு:—(1) மேற்கண்ட தாரணை, தியானம், ஸமாதி என்பவைகளில் ஏறியவனுக்கு இனிவரும் யோகபூமிகளில் ஸம்யமம் உபயோகமானது. கீழான பூமிகளை ஸ்வாதீநப்படுத்தாமல் மேல் பூமியில் பிரவேசித்தல் இயலாதாம். ஒருகால் ஆயினும் அவைகளில் பிரக்ஞாப் பிரகாசம் நிகழாதாம். கீழான பூமிகளில் சித்திகளில் ஆசைப்பட்டு அவைகளை அப்பியஸிக்கிறவன், (அதாவது தூரதர்சநம், தூரக் கேள்வி முதலியன) மேல் பூமியில் ஏற இயலான். கீழ் பூமி பிரவிர்த்திகளை விட்டு மேல் நோக்கவேண்டும். ஒரு பூமிக்கு அடுத்து மேலாக இன்னபூமி இருக்கிறதென்பது யோகிக்குத் தனக்குத் தானே தெரியவரும். இதை வேறொருவர் உபதேசிக்கவேண்டியதில்லை. முந்திய பூமியில் இருக்கின்றவன் அதன் அநுபவத்தால் இனிவரும் பூமியின் தன்மையைத் தெரிந்துகொள்வான். அந்த உயர்பூமியைத் தர்சித்து ஸந்தோஷிப்பான். ஓர் ஓர் பூமியில் யோகம் ஸ்திரப்படுவதால் மேன்மேலும் யோகம் நலம்பெறும். மேற்கண்ட விஷயங்களில் சில அடியிற்கண்ட சுலோகத்தின் தாத்பரியத்தை வெளிப்படுத்துகின்றன.

> "யொகெந யொகொ ஜ்ஞாதவ்யொ
> யொகொ யொகாத் ப்ரவர்த்ததே।
> யொ ப்ரமத்தஸ்து யொகெந
> ஸ யொகீ ரமதே சிரம்॥"

இதன் பொருள்:—(ஒரு பூமியின்) யோகாப்பியாஸத்தினால் (அதன் அடுத்த மேல் பூமி (இத்தன்மையதென) அறியப்படுகிறது. பூர்வபூமியை ஜயிப்பதால் மேலானபூமியில் பிரவேசம்ஏற்படுகிறது. எந்த யோகி யோகாப்பியாஸத்தில் உண்டாகும் சித்திகளில் மயங்கி மோசம் போகானோ, அவன் யோகத்தின் சுகத்தை நீடித்த காலம் அநுபவிக்கிறான்.

(2) பல பூமிகள் என்பது தியானத்தில் பல படிகள் என அறியவேண்டும். முதலில் ஈசுவரனைப் பல ஆபரணங்கள் உள்ளவராகத் தியானிக்கவேண்டும். அந்தத் தியானம் ஸ்திரப்பட அவைகளில் ஒன்றொன்றாய் விட்டு அவரைத் தியானிக்கவேண்டும். பின்பு

எல்லாவற்றையும் முற்றும் விட்டு அவரைத் தியானிக்கவும், பின்பு அவருடைய பல அங்கங்களைத் தியானிக்கவும், பின்பு அவரும் தியானிக்கிறவனும் ஒருவர் என தியானிக்கவும் வேண்டும். அதாவது. "ஸோஹம்" "ஹம்ஸ:" என்ற விதமாய் "அவரே நாம்" "நாமே அவர்" என்பதாகத் தியானிக்கவேண்டும். பின்பு இந்தவித த்வைத நாட்டமும் அற்று, "நான்" என்ற பிரக்ஞை மாத்திரம் நிகழும் நிலைமை வரையில் தியானம் உயர்நலம் பெறுவதாகும்.*

7. த்ரயமந்தரங்கம் பூர்வேப்ய:॥

முன் சொன்ன (யமம் முதலியவற்றைப் பார்க்கிலும் இவை மூன்றும் (ஸம்ப்ரக்ஞாத ஸமாதிக்கு) அந்தரங்க ஸாதநங்களாம்.

குறிப்பு:—இயமம், நியமம் முதலிய ஐந்தும் சரீரம், பிராணன், இந்திரியம், மநம் இவைகளின் மலங்களை விலக்குகின்றன. தாரணை முதலிய மூன்றும் ஸமாதியின் ஸ்வரூபத்திற்கு ஸாக்ஷாத்தாக உதவுகின்றமையால் அந்தரங்கமெனச் சொல்லப்படுகின்றன.

8. ததபி பஹிரங்கம் நிர்பீஜஸ்ய॥

இவை மூன்றும் கூட, நிர்பீஜ ஸமாதிக்கு (அஸம்ப்ரக்ஞாத ஸமாதிக்கு) வெளிப்படையான ஸாதநங்களாம்.

குறிப்பு:—(1) தாரணை முதலியவை ஒய்வடைந்த நிலையே அஸம்ப்ரக்ஞாத ஸமாதியாகும். இந்நிலையில் தாரணை முதலியவை இல்லாமற் போகின்றன. அதனால் இவை பஹிரங்க (வெளிப்படையான) சாதநங்கள் எனச் சொல்லப்படுகின்றன.

(2) தாரணை முதலியவை யாதேனும் ஒரு விர்த்தியுடன் நிகழ்வது. இவை மூன்றின் அப்பியாஸத்தினால் ஸம்ப்ரக்ஞாத ஸமாதியின் மேன்மையை யோகி அடைகிறான். பரவைராக்யம் என்ற பிரக்ஞா ப்ரஸாதத்தைப் பெறுகிறான். இதனால் அஸம்ப்ரக்ஞாத ஸமாதிக்கு அர்ஹனாகிறான். தாரணை முதலியவை பிரக்ஞாப்ர

---

* நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென்று நானென்றுஞ் சாற்றகி லேனே.—திருமந்திரம்.

ஸாதத்தை உண்டுபண்ணுகிறதே தவிர ஸாக்ஷாத்தாக அஸம்ப்ரக்ஞாத ஸமாதியை உண்டுபண்ணுகிறதில்லை.

9. വ്യുത്ഥാനനിരോധസംസ്കാരയോരഭിഭവപ്രാദുർഭാവൗ നിരോധക്ഷണചിത്താന്വയോ നിരോധപരിണാമഃ ॥

பஹிர்முகமான வாஸனைகள் என்ன, அவைகளைத் தடுக்கின்ற வாஸனைகள் (என்ன அதாவது நிரோத வாஸனைகளென்ன), இவைகள் முறையே தணிதலும் விருத்திபெறுதலும் (ஏற்படுங்காலத்தில்) நிரோதம் என்ற பூமியில் மனம் இடையறாது நிற்கும். அது நிரோத பரிணாமம் (நிரோத விர்த்தியாக மனம் மாற்றம் பெறுதல்) எனப் பெயர் பெறும்.

குறிப்பு:—(1) புருஷன் அசலன். குணம், குணகாரியம் எல்லாம் சலனமுள்ளவை. குணகாரியமான மனமும் சலனமுள்ளதினால், அஸம்ப்ரக்ஞாத ஸமாதியிற்கூட மனம் சலனமுற்றிருக்கும். அதாவது பரிணாமம் பெற்று நிகழும். அந்நிலையில் உள்ள பரிணாமம் எத்தன்மையது என்பதை இச்சூத்திரம் விளக்குகின்றது.

(2) வ்யுத்தானம் என்பது மனம் பஹிர்முகப்படுதல். இந்த இடத்தில் அஸம்ப்ரக்ஞாத ஸமாதியை நோக்க, ஸம்ப்ரக்ஞாதஸமாதி பஹிர்முகமாக இருத்தலால், வ்யுத்தானம் என்பது ஸம்ப்ரக்ஞாத ஸமாதியைக் குறிக்கிறது. நிரோதம் என்பது பரவைராக்யம். இது ஏற்படுதல் அஸம்ப்ரக்ஞாத ஸமாதி நிலையாம்.

10, തസ്യ പ്രശാന്തവാഹിതാ സംസ്കാരാത് ॥

அதற்கு (அந்நிலையிலுள்ள மனத்திற்கு) மேற்படி நிரோத ஸம்ஸ்கார அப்பியாசத்தினால், சாந்தநிலை பிரவாகமாக ஏற்படுகிறது.

குறிப்பு:—பிரவாகம் = இடையறாமல் இருத்தல். வ்யுத்தான ஸம்ஸ்காரம் குறைவுபடவும் நிரோத ஸம்ஸ்காரம் ஸ்திரப்படுதலை இச்சூத்திரம் விளக்குகின்றது.

11. സർവാർത്ഥതൈകാഗ്രതയോഃ ക്ഷയോദയൗ ചിത്തസ്യ സമാധിപരിണാമഃ ॥

எல்லா வஸ்துக்களையும் பற்றிச் செல்லும் மநத்தின் தன்மை குறையவும், ஐகாக்ரியம் பெறும் தன்மை விருத்தியாகவும் மநம் ஸமாதி நிலையைப் பெறுகிறது.

குறிப்பு:—இது ஸம்ப்ரக்ஞாத ஸமாதியைப் பற்றியது. மநத்திற்கு இரண்டு தன்மைகள் உண்டு. ஒன்று எல்லா வஸ்துக்களையும் கிரகிக்கும் தன்மை. மற்றது ஒரே வஸ்துவினிடம் ஒருமுகப்பட்டிருக்கும் தன்மை. இவைகளில் முன்னது ஸாதாரணமாய் நடைபெறுகிறது. பின்னது குப்தமாக இருக்கிறது. முன்னதை அடக்கி, அல்லது குறைபண்ணிப் பின்னதை வெளிப்படுத்தி விருத்தி செய்தால், ஸமாதி கைகூடும். இதுவே மநம் ஐகாக்ரியம் பெறும் நெறி.

12. ததஃ புநஃ ஶாந்தோதிதௌ துல்யப்ரத்யயௌ சித்தஸ்யைகாக்ரதா பரிணாமஃ ॥

பிறகு (விக்ஷேபவிர்த்தீ குறைந்த பிறகு) சித்தத்தின் சென்ற விர்த்தியும், நிகழும் விர்த்தியும் ஒரே ரூபமாக இருந்தால், மநம் ஏகாக்கிர நிலையைப் பெறும்.

குறிப்பு:—(1) ஒரே வஸ்துவைப் பார்ப்பதில் அவ்வஸ்துவின் பல பாகங்களைப் பார்த்தால் வித்தியாஸமான விஷயங்கள் மநத்தில் உண்டாகின்றன. அப்படியின்றி ஒரு வஸ்துவின் ஒரே பாகத்தை அதாவது அதன் ஒரே விஷயத்தை மநத்தில் நிறுத்தி அவ்விர்த்தி ரூபமாக மநம் நிற்கும் நிலை மநத்தின் ஒருமுகப்பட்ட நிலை. இந்நிலையில் காலங்கழிதல் தோன்றாது. எவ்வளவுக் கெவ்வளவு காலநிகழ்ச்சி பிரக்ஞைக்கு வராமல் இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு மநத்தின் ஏகாக்கிர நிலை உறுதிப்பட்டதென்பதற்கு அறிகுறியாம். சாதாரணமாய் ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றிய சிந்தனை நீடித்து நிகழுமாகில் அப்போது காலநிகழ்ச்சி தோன்றாமல் இருக்கின்றமையைக் காண்கின்றோம், எவ்வளவு காலம் கழிந்துவிட்டது என்று நாமே ஆச்சரியமாகக் காண்கின்றோம். இச்சூத்திரத்தில் அத்தன்மையான நிலையைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. விர்த்தியின் பிரவாகம் ஒரே தன்மையாக நிகழற்பாலது என்பது இச்சூத்திரத்தின் தேர்ந்த பொருள்.

(2) முன் சூத்திரத்தில் ஸமாதிநிலையைப்பெற முயலுகின்ற மநத்தின் நிலையையும், இச்சூத்திரத்தில் ஸமாதி நிலையைப் பெற்ற மநத்தின் நிலையையும் சொல்லுகிறார்.

13. ஏதேந பூதேந்த்ரியேஷு

தர்மலக்ஷணாவஸ்தா பரிணாமா வ்யாக்யாதா: ॥

அதனால் (முன் சூத்திரங்களில் மநத்தின் பரிணாமங்களைச் சொல்லி விட்டபடியால்) பூதங்களுடையவும், இந்திரியங்களுடையவும் தர்மம், லக்ஷணம், அவஸ்தை என்ற மூன்று பரிணாமங்கள் தெளிவாய்ச் சொல்லப்பட்டனவாக ஏற்படுகிறது.

குறிப்பு:—ஒவ்வொரு வஸ்துவும், தர்மம், தர்மி என இருபான்மையதாக நினைக்கற்பாலது. தர்மத்தை உத்தேசிக்க, தர்மி நிலையுள்ளதாகவும், தர்மம் நிலையில்லாததாகவும் இருக்கின்றன. வஸ்துவின் உண்மையான நிலை ஸ்திரமானதாக இருக்கின்றமையால், அது கூடஸ்த தன்மையை உடையது என்று சொல்லப்படுகின்றது. தர்மங்களோ மாறிமாறிக்கொண்டிருக்கும் தன்மையனவாகையால் அவைகள் பரிணமங்கள் எனச் சொல்லப்படுகின்றன. இப்பரிணமங்கள் முப்பான்மையன. தர்மம், லக்ஷணம்,, அவஸ்தை என்பனவாம்.

தர்மம் என்பது வஸ்துவை நோக்கும் காலத்தில் அதன்கண் முன்னுள்ள ஒரு குணத்தின் நிலைமை வெளிப்படுதல்.

அவஸ்தை: அந்நிலைமை விருத்தியடைதலும் அல்லது குறைதலும்.

லக்ஷணம்:ஒரு குணம் அல்லது தர்மம் நிகழும் காலத்தில் மற்றைய தர்மங்கள் சென்றிருக்கலாம், இனிமேல் வரலாம். இதில் கால வித்தியாசம் ஏற்படும்.

உதாரணமாக அந்தக்கரணம் என்பது தர்மி, அதின்கண் வ்யுத்தானம், நிரோதம், ஏகாக்கிரம் என்ற மூன்று தர்மங்கள் ஏற்படுகின்றன. ஒரு தர்மம் நிகழுங் காலத்தில் மற்றைய இரண்டில் ஒன்று அதிதமாகவும் (சென்று போனதாகவும்), மற்றொன்று அநாகதமாகவும் (இனி வரப்போகின்றதாகவும்) இருக்கின்றன. அந்தக்கர

ணத்தை உத்தேசித்து நிகழும் குணம் தர்மபரிணமம் என்றும், சென்று போனதை அல்லது வரப்போகின்றதை உத்தேசித்து லக்ஷண பரிணமம் என்றும், நிகழும் தர்மம் விருத்தியடைந்தாலும குறைந்தாலும் அது அவஸ்தாபரிணமம் என்றும் சொல்லப்படுகின்றன. இவ்விதமே பூதங்களிலும் இந்திரியங்களிலும் இந்த மூன்று பரிணமங்கள் ஏற்படுகின்றன. தர்மம் ஒரு குணம் உற்பத்தி. அவஸ்தை அதுவே விருத்திப்படுதல் அல்லது குறைவுபடுதல். லக்ஷணம் ஒரு குணம் நிகழ்தல், ஒன்று முன்னமேயே நிகழ்ந்தது, ஒன்று இனி நிகழப்போகின்றது. இவைகளை முறையே ஆங்கில நூல்களில் Causality (காரண காரியபரம்பரை), Space (தேசம்), time (காலம்) என மூன்றாகச் சொல்லப்படுகின்றன. தர்மம், தர்மி என்ற சம்பந்தமானது எப்போதும் ஒரே நிலையுள்ளதன்று. ஒரு தர்மத்தை நோக்க, மற்றொன்று தர்மியாக இருக்கலாம். அந்தத் தர்மியே வேறொன்றை நோக்க தர்மமாக அமைவுறும். தர்மி, தர்மம் என்ற பரம்பரை, காரணகாரியப்பிரவாகத்திற் உள்ளே நோக்கிச் செல்லச் செல்ல கடைமுறையில் மூலப்பிரகிருதி தர்மியாக முடியும். இது சாங்கிய சாஸ்திரத்தின் துணிபு. அத்வைத சாஸ்திரத்தில் கடைமுறையிலுள்ள மூலப்பிரகிருதியான தர்மியே அநிர்வசநீயமான ஈசுவர சக்தி அல்லது மாயை என்ற தர்மமாக ஏற்படும். சிலர் அபிப்பிராயத்தில் தர்மங்களுடைய தொகுதியைத்தவிர தர்மி என்பது தனித்து வேறாக ஒன்றுமில்லை என்பதாம். யோகிகள் மதத்தில் தர்மங்கள் மாறி மாறிக் கொண்டிருந்தாலும் அவைகளை விட வேறாக மாறுததாக ஒன்று உளது என்பதாம். அது தர்மீ, தர்மத்தை உடையது.

14. ஶாந்தோதிதாவ்யபதேஶ்யதர்மாநுபாதீ தர்மீ ||

தர்மீ என்பது சாந்தம், உதிதம், அவ்யபதேசியம் என்ற தர்மங்களில் நுழைந்துள்ள தொடர்பான வஸ்துவாம்.

குறிப்பு:—சாந்தம் = அடங்கிப்போன, சென்றுபோன. உதிதம்=உற்பத்தியாகின்றன. நிகழ்கின்ற, அவ்யபதேசியம்=சூக்ஷ்மமான, அதனல் சொல்லமுடியாத, குப்தமாயுள்ள, காரணரூபமாயுள்ள, இனி வெளியாகக்கூடிய. அந்தர்கதமாகவுள்ள, இனி வரப்

போகின்ற. மேலும் அவ்யபதேசியம் என்ற வார்த்தை இன்னகார ணத்தினின்று இன்ன காரியம் உண்டாகும் என்பதைச் சொல்லக் கூடாமையைத் தெரிவிக்கும் பொருட்டு உபயோகிக்கப்பட்டிருக்கி றது. "ஸர்வம் ஸர்வாத்மகம்" என்ற தைத்திரியோபநிஷத் வசநத்தை யநுசரித்து எல்லாக் காரணமும் எல்லாக் காரியமாகவும் ஆகலாம் என்பது பாஷ்யகாரரான வியாஸ ரிஷியின் அபிப்பிராயம்.

அதனால் நீர், நிலம், சீதம், உஷ்ணம் முதலானவைகளின் பரி ணாமத்தால், தேசகாலங்களை அநுசரித்து, காரண ரூபமான பீஜத் தில் இருக்கின்ற சிற்சில சக்திகள் விசித்திரமான இலை, மலர், காய், கனிகளாக வெளிப்படுகின்றன; இவைகளைத் தவிர, வெளிப்படாத சக்திகள் அநேகம் குப்தமா யிருக்கின்றன. ஒவ்வொரு காரணத் திலும் எல்லாக் காரியங்களும் உள்ளன. ஆனால் அவை வெளிப்படு தல் கால தேச வர்த்தமாநங்களைப் பொறுத்ததாக இருக்கிறது. அநேக சக்திகள் வெளிப்படாமைக்கு அநேக தடைகள் இருக்கின் றன. அத்தடைகளை விலக்கினேனாகில், அச்சக்திகள் வியக்தப் படும். யோகியானவன் அத்தடைகளை விலக்கிக்கொள்ளும் சக்தியை யுடையவனாகையால், எந்தக் காரியத்தையும் எந்தக்காரணத்தினி ன்றும் உண்டுபண்ணுவான்.

15. க்ரமாந்யத்வம் பரிணாமாந்யத்வே ஹேது:॥

தர்மியின்கண் பரிணமங்கள் வெவ்வேறாக இருத்தலுக்கு (தர்மியில் தர்மங்கள் ஒன்றின்பின் ஒன்றாய்த் தோன்றும்) கிரமம் காரணமாம்.

குறிப்பு:—(1) உதாரணமாக, மண் ஒன்றே பொடியாகவும், பிண்ட மாகவும், கடமாவும் இருக்கிறது. "மண் ஒன்று தான் பல நற்கலமா யிடும்" என்ற திருமந்திர வசநம் இங்கு கவனிக்கத்தக்கது. பல மாற்றங்கள் இருந்தாலும் தர்மியாகிய மண் ஒன்றே என்று அறிக. தர்மங்களைத்தவிர, தர்மி என்பதாக வேறு ஒன்று இல்லை என்னும் பக்ஷத்தில், ஒவ்வொரு பரிணாமமும் உண்டாகும் காலத்தில் மண் என்ற ஞானம் வாராமல் போம். அநுபவத்தில் அப்படியன்று. மண் என்ற ஞானம் உள்ளது. இப்பரிணாமங்கள் ஒன்றின்பின் ஒன்றாய்

தோன்றலில் ஒருபரிணமம் தர்மியாகவும் மற்றொன்று தர்மமாகவும் ஏற்படுகிறது. கடாதிகளை நோக்க, மண் தர்மி. ஜலத்தை நோக்க மண் தர்மம். ஜலம் தர்மி. இவ்விதமே தேஜஸ், வாயு, ஆகாசம் பஞ்ச தந்மாத்திரைகள், பூதாதி, அகங்காரம், மஹத்தத்துவம், மூலப்பிரகிருதிவரை ஆராய்ச்சி நிகழில், கீழானது தர்மமாகவும், மேலானது தர்மியாகவும் கடைமுறையில், மூலப்பிரகிருதி தான் பரமதர்மியாக ஏற்படும். இது சாங்கியர்களின் சித்தாந்தம். புருஷனைத் தவிர, மற்றெல்லா வஸ்துக்களும் ஒவ்வொரு க்ஷணத்திலும் பரிணமமுள்ளவை. அதனால் ஒருவஸ்து புதிதாகத் தோன்றினும் பழமையைப் பெற்று க்ஷீண தசையை அடையினும், சிறுகச்சிறுக மாறுதல் அடைந்து அவ்விதம் தோன்றுதல் ஏற்படுகிறதே அல்லாமல், முன்பின் காரணமின்றி திடீரென, அவ்விதம்தோன்றுதல் இன்றாம்.

(2) சில பரிணமங்கள் மநத்திற்குப் பிரத்தியக்ஷமானவை, சில பரோக்ஷமானவை. அவைகளில், காமம், சுகம், துக்கம், பிரமாணங்கள் முதலியவை பிரத்தியக்ஷமானவை. நிரோதம் (அஸம்ப்ரக்ஞாத ஸமாதிநிலை, புண்ணியாபுண்ணிய தர்மங்கள், மநதின் வாஸனைகள்) சத்வகுண, ரஜோகுண, தமோகுணங்கள் மேலிடுவதால் உண்டாம் மநத்தின் பரிணமங்கள், சரீரத்தின்கண் பிராணன் இருக்கின்றநிலை, சரீர சேஷ்டைகளுக்கும் மநச் சேஷ்டைகளுக்கும் உள்ள சம்பந்தம், வஸ்துக்களின் சக்தி, இவை ஏழும் பரோக்ஷமானவை.

16. பரிணாமத்ரயஸம்யமாததீதாநாகதஜ்ஞாநம் ॥

மூன்று பரிணமங்க (தர்மம், லக்ஷணம், அவஸ்தை) ளிலும் ஸம்யமம் செய்வதினால் (மநத்தை நிறுத்துவதினால்) சென்ற விஷயங்களினுடையவும், வரப்போகின்ற விஷயங்களினுடையவும் சாக்ஷாத்காரமான ஞானம் உண்டாகிறது.

குறிப்பு:—வஸ்துக்களின் உண்மையான நிலையை அறிந்தால் அதாவது அவைகளின் சூக்ஷ்மமான பரிணமங்களை அறிந்தால், அவை மூலமாய் முன்பின் அறியலாம். ஸம்யமம்=தாரணை, தியானம், ஸமாதி.

# புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |
| பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| சுவேதாசுவதரோபநிஷத் | 0-3-0 |
| ஐதரேயோபநிஷத் ஷை | 0-2-0 |
| மௌநவாக்கு | 0-2-0 |
| சந்மார்க்கதீபம் | 0-2-0 |
| ஈசோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-1-0 |
| அந்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்) | 0-1-0 |
| டில்லிதர்பார் மஹோத்ஸவம் | 0-1-0 |
| வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின்சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | 0-1-0 |
| வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம் | 0-0-6 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-3-0 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்) | 0-0-3 |
| சிராத்தம் | 0-0-3 |
| சந்மார்க்க சபையை நடத்தும் முறை | 0-0-3 |
| பிரஹ்மஞாந சபையின் யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| அஷ்டமி பிரதக்ஷிணம் | 0-0-1 |
| பிரஹ்மஞாந சபை | 0-0-1 |
| தசாவதாரங்களின் உண்மை | 0-0-3 |
| மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும் | 0-0-3 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி பிரெஸிடெண்டு ப. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## அறிவிப்பு.

### உயர்ந்த புத்தகங்கள்! குறைந்தவிலை!

உபநிஷத் அர்த்ததீபிகை என்னும் பெயரால் பிரசித்தம் செய்யப் பெற்ற உபநிஷத்துக்களும், ஸூத்ரார்த்ததீபிகை என்னும் பெயரால் வெளிவந்த வேதாந்தஸூத்ரபாஷ்யம் 9பாகங்களும், அடியிற்கண்ட குறைந்த விலைக்குச் சொற்பகாலம் விற்கப்படும். வேண்டியவர்கள் மதுரை பிரஹ்மஜ்ஞானசபை பிரசிடெண்டு ப. நாராயணய்யரவர்களிடமிருந்தும், தஞ்சாவூரில் கோவிந்தன் அண்ட் பிரதர்ஸ் கம்பெனியிலிருந்தும், சென்னை தம்புசெட்டித் தெரு ரிப்பன்பிரஸ்ஸிலிருந்தும், அடியில் கையொப்பமிட்டிருக்கிறவரிடமிருந்தும், பெற்றுக்கொள்ளலாம்.

### புத்தகங்களின் விவரம்.

இவைகளில் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ்பாஷ்யங்களும் குறிப்புரைகளும் அடங்கியிருக்கின்றன.

| | முன்விலை. | இப்போதையவிலை. |
|---|---|---|
| | ரூ அ ப | ரூ அ ப |
| ஈசோபநிஷத் | 1—8 —0 | 0—8 —0 |
| கேநோபநிஷத் | 1—12—0 | 0—10—0 |
| கடம் ஷை | 4—0 —0 | 1—8 —0 |
| முண்டகம் | 2—8 —0 | 1—0 —0 |
| மாண்டூக்யம் | 3—8 —0 | 1—8 —0 |
| தைத்ரீயம் | 6—0 —0 | 2—0 —0 |
| ஸூத்ரார்த்ததீபிகை 9ஸஞ்சிகை | 6—12—0 | 2—4 —0 |

தபால்சார்ஜ் பிரத்யேகம்.

அ. சிவராவ்.
ரிடைர்டு டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார்,
61 நிர். கச்சேரி ரோட்,
மைலாப்பூர்.

## NOTICE.

A Theosophical Book Depot has been opened at the *Hall of Theosophy, Madura* for sale of English and Tamil Theosophical books which are sold very cheap.

V. VENCUSAMI AIYER,
Manager.
Theosophical Book Depot,